விலை: 50.00
பக்கங்கள் : 16
website : www.valampurii.lk
viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka


# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com
சங்கு 25
ஒலி 080 வள்ளுவர் ஆண்டு 2055 மாசி 25 வெள்ளிக்கிழமை (08.03.2024) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829

கல்யாண மாலை
சர்வதேச இலவச திருமண சேவை

T.P: 021 720 1005
இல.144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.
kalyanamalai.jaffna@gmail.com
4000/= மட்டுமே

## வடக்கில் பேரனர்த்தமாக மாறியது வெள்ளை ஈ தாக்கம்



- தென்னைகள் அழிவடையும் தருவாயில்
- ஏனைய தாவரங்களிலும் பரவும் வாய்ப்பு.
- பொதுமக்கள் அவதானமாகச் செயற்படுமாறு எச்சரிக்கை.

(யாழ்ப்பாணம்)

வடக்கு மாகாணத்தில் வெள்ளை ஈயின் தாக்கமானது தென்னை மரங்களில் அதி கப்படியான தாக்கத்தை ஏற் படுத்தி கட்டுப்படுத்த முடியாத நிலைமைக்குச் சென்றுள் ளது.

அத்தோடு வெள்ளை ஈ தாக்கம் தென்னை மரங்கள் தவிர்ந்த ஏனைய மரங் களிலும் பரவியுள் 15

பொதுமக்களின் எதிர்ப்புக்கு மத்தியிலும்

## இலங்கை - இந்தியா இடையே மின்சார பரிமாற்றுத் திட்டம்

### மின்சக்தி அமைச்சின் செயலாளர் உறுதி

(கொழும்பு)

வடபுலத்திலிருந்து மீள் புதுப்பிக்கத்தக்க சக்தி ஊடாக ஜயாயிரம் மெகா வாட்ஸ் மின் சாரத்தைப் பெற அரசாங்கம் திட்டமிட்டுள்ளது.


எனினும் அரசின் முயற்சி களிற்கு மன்னார் மற்றும் பூநக ரியில் பொதுமக்களிடமிருந்து கடுமையான எதிர்ப்புக்கள் கிளர்ந்துள்ளன.

இந்நிலையில் இலங்கை மற்றும் இந்தியாவிற்கு இடையே கடலுக்கடி 15

# சிங்களவர்களின் காணியிலேயே தையிட்டி விகாரை கட்டப்பட்டுள்ளது

## எவராலும் உறுதி கோரமுடியாது

### வாதம் புரிகிறது இராணுவம்



(தையிட்டி)

**யாழ்ப்பாணம் தையிட்டியில் சிங்களவர்கள் வாழ்ந்த காணியில்தான் விகாரை அமைக்கப்பட் டுள்ளது என இராணுவம் கூறியுள்ளது.**

தமிழ் மக்களுக்குச் சொந்தமான காணியில் சட்டவிரோதமாக அமைக்கப் பட்ட தையிட்டி விகாரைக்கு காணியைப் பெற்றுக் கொடுக்கும் நடவடிக்கையில் இராணுவம் களமிறங்கியுள்ள நிலையில் குறித்த விடயத்துக்கு பாராளுமன்ற துறைசார் மேற்பார்வை குழுவில் எதிர்ப்பு கிளம்பியுள்ளது.

அதேவேளை, தையிட்டி விகாரை யுள்ள 8.04 ஏக்கர் காணியை சட்டப்படி வழங்குமாறு பாராளுமன்ற துறைசார் மேற்பார்வைக் குழு 16

## கேதீச்சரத்தில் சிவராத்திரிப் பெருவிழா



(மன்னார்)

பஞ்ச ஈச்சரங்களில் ஒன் றான பாடல்பெற்ற திருக்கேதீச் சர ஆலயத்தில் மகா சிவராத் திரி பெருவிழாவானது இன்று பக்தி பூர்வமாக இடம்பெற வுள்ளது.

இன்றுமாலை 4.30 மணிக்கு மகா பிரதோஷ பூஜையினைத் தொடர்ந்து மகாசிவராத்திரி ஆரம்பமாகவுள்ளது.

அதன் பிரகாரம் மாலை 6 மணிக்கு முதலாம் சாமப் பூஜையும் இரவு 9 மணிக்கு இரண்டாம் 15

## ஐ.எம்.எப் பிரதிநிதிகள் ஜனாதிபதியுடன் சந்திப்பு



15

## தென்னக்கோனுக்கு எதிராக உயர்நீதிமன்றில் மனு

(கொழும்பு)

பொலிஸ்மா அதிபர் பதவிக்கு தேசபந்து தென்னக்கோன் நியமிக்கப்பட்டமையை சவாலுக்கு உட்படுத்தி, ஐக்கிய மக்கள் சக்தியினால் உயர் நீதி மன்றில் நேற்று அடிப்படை உரிமை மீறல் மனுத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

கட்சியின் ஊழல் எதிர்ப்புக் குழு உறுப்பினர் களான நிரோஷன் பாதுக்க மற்றும் ஆனந்த பாலித ஆகியோரால் இந்த மனுத் தாக்கல் 15

## வடக்கு மாகாண பிரதம செயலாளராக இளங்கோவன் நியமனம்



(யாழ்ப்பாணம்)

வடக்கு மாகாணப் பிரதம செய லாளராகத் தற்போதைய ஜனாதி பதி செயலகத்தின் மேலதிகச் செயலாளர் எல். இளங் கோவன் நியமிக் கப்பட்டுள்ளார். 15

சிவராத்திரிக்கான ஏற்பாடுகளை முன்னெடுத்த

## வெடுக்குநாறி ஆதிசிவனாலய பூசகர் பொலிஸாரால் கைது

(வவுனியா)

வெடுக்குநாறி ஆதிசிவன் ஆலய பூசகர் நேற்றிரவு பொலிஸாரால் கைது செய் யப்பட்டுள்ளார்.

மகா சிவராத்திரி வழிபாட் டுக்குத் தேவையான முன் னாயத்த நடவடிக்கைகளில் ஈடுபட்டிருந்தவேளையி லேயே அவர் கைது செய்யப் பட்டுள்ளதாக ஆலய நிர் வாகத்தினர் தெரிவித்துள்ள னர்.

மேலும் இன்று இடம்பெற வுள்ள சிவராத்திரி உற்சவத்துக்கான 15

## அதிகாரப் பகிர்வு நாட்டை ஒருபோதும் பிளவுபடுத்தாது

### அமைச்சர் அலி சப்ரி எடுத்துரைப்பு



(கொழும்பு)

அதிகார பகிர்வு நாட்டை பிளவுபடுத்தும் என்ற கூற்று முற்றிலும் தவறானது. தங்களைத் தாங்களே ஆள் கிறோம் என்ற மனநிலை தமிழ் மக்கள் மத்தியில் ஏற்பட வேண்டுமென்றால் அதிகாரப் பகிர்வு அவசியமானது என, வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி பாராளுமன்றத்தில் தெரிவித்தார். 16

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பு



தோற்றம் 19 . 04 . 1955

மறைவு 07 . 02 . 2024

கடந்த 07.02.2024 அன்று இறைபதமடைந்த எமது குடும்ப விளக்கு

## அமரர் லீலாவதி(லீலா) மகேந்திரன்

("தென்றல்" காகிதாதிகள், பல்வகை அங்காடி – உரிமையாளர்)

அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் 08.03.2024 வெள்ளிக்கிழமை அதி காலை 05.00 மணியளவில் கீரிமலை புனித தீர்த்தக்கரையில் நடைபெறும். அதனைத் தொடர்ந்து அன்னாரது இல்லத்தில் மு.ப 10.00 மணியளவில் நடைபெறும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் மதிய போசன நிகழ்விலும் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் கலந்துகொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

**இவ் அழைப்பை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக் கொள்கின்றோம்.**

(19356)

"பழம் நீ"
இமையாணன் அறிவாலயம், கரணவாய்.
(குஞ்சர் கடைச் சந்தி)

குடும்பத்தினர்

# மணிவிழா



(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணக் கல்வி வலயத்தின் ஆரம்பக் கல்வி ஆசிரிய ஆலோசகர் திருமதி நளினி அகில தாஸ் அவர்களின் மணி விழா நாளை 9 ஆம் திகதி சனிக்கிழமை மாலை 4 மணிக்கு யாழ்ப்பாணம் சேர்.பொன். இராமநாதன் வீதியில் அமைந்துள்ள சரஸ்வதி மண்டபத்தில் (ராஜா கிறீம் ஹவுஸ்) நடைபெறும். (ந-7,10)

# 15 ஆம் ஆண்டு நினைவு அஞ்சலி

அமரர்

## குமாரசாமி சங்கீர்த்தனன்




*அன்பு மகனே! எம் தலைமகனே சங்கீர்த்தா!*
*பதினாறு வயதினிலே பரிதவிக்க எமைவிட்டு*
*பதினைந்து ஆண்டுகள் பாகாய்த்தான் ஓடியது*
*மறக்காது உன் நினைவு*
*எம் மனக் கண்ணில் என்றென்றும்*
*ஐயா!*
*உன் நினைவுநாள் வருகையில்*
*நினைகுலைந்து போகின்றோம்*
*கொடிய காலனின் குண்டுபட்டு*
*குறை வழியே சென்று விட்டாய் எம்மைவிட்டு*
*காணாத கண்ணிற்கு கரைந்து போன கற்பூரமே*
*நிறையேதும் இல்லாமல் வாழ்கின்றோம்*
*நாமிங்கு உனைவிட்டு.*

(19365)

2 ஆம் வட்டாரம், கோம்பாவில்
புதுக்குடியிருப்பு, முல்லைத்தீவு.

தகவல் : குடும்பத்தினர்
077 552 8816

# 16 ஆம் ஆண்டு நினைவு நாள்



## மாமனிதர் கிட்டிணன் சிவநேசன்

முந்நாள் நாடாளுமன்ற உறுப்பினர்
(தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு)
முந்நாள் பொது முகாமையாளர்
(பேரிணையம், வட மாகாண பனை, தென்னை வள கூட்டுறவு நிறுவனம்)

தாயின் மடியில் 21.01.1957

தாயக மண்ணில் 06.03.2008

சிம்மக் குரலுடையோன் சிந்தனைப் பற்றுடையோன்
சீர் வள நாடெங்கும் சென்று நம் இன விடிவிற்காய்
சொற்றொடர் முழங்கியோன்.
கூட்டுறவின் உயர்விற்காய் கூடி நிதம் உழைத்தோன்.
நாடி வந்தோர் குறைகேட்டு நாடாளுமன்றமதில்
நாற்றிசையும் முரசறைந்தோன்.
பதியதன் விதியதால் பதினாறு ஆண்டுகள்
உமை இழந்து தவிக்கின்றோம்
உம் நினைவுகள் என்றும் எம் நிழலாகி...

**இந்நாளில் அன்னாருடன் சாவடைந்த சாரதி பெரியண்ணன் மகேஸ்வரராசா அவர்களையும் நினைவுகூருகின்றோம்**

யார்க்கரு, கரவெட்டி கிழக்கு,
கரவெட்டி.

(C-8492)

தகவல்:–
குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அதிகப்படியான சூரிய ஒளியால் பார்வை இழப்பு ஏற்படலாம்

## வைத்திய நிபுணர் முதித எச்சரிக்கை

(கொழும்பு)

**நாட்டில் நிலவும் அதிக படியான சூரிய ஒளியின் தாக்கம் பார்வை இழப்பிற்கு வழிவகுக்கும் என கண் வைத்திய நிபுணர் முதித குலதுங்க தெரிவித்துள்ளார்.**

அதிக சூரிய ஒளியால் கண்கள் வறண்டு போகாமல் இருக்க தண்ணீர் அருந்த வேண்டும் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

மேலும் புற ஊதா கதிர்கள் கண்களுக்குள் படாமல் இருக்க கண்ணாடி பயன்படுத்துவதும் அவசியம் என்றும் அதற்கு மேலதிகமாக கண்களை பாதிக்காத தொப்பிகளை பயன்படுத்துமாறும் அவர் ஆலோசனை வழங்கியுள்ளார். (நி-5-6)

# வடக்கு-கிழக்கு உட்பட பல கிராமங்களில் ஒரேஞ் செய்கை

## விவசாய அமைச்சு திட்டம்

(கொழும்பு)

86 கிராமங்களைத் தேர்ந்தெடுத்து 45 ஆயிரம் ஒரேஞ் மரங்களை நடுகை செய்ய விவசாய அமைச்சு முடிவு செய்துள்ளது.

யாழ்ப்பாணத்தில் 3 கிராமங்கள் உட்பட மொனராகலை, மாத்தறை, குருநாகல, குளியாபிட்டிய, கேகாலை, கம்பஹா, களுத்துறை, மாரவில, இரத்தினபுரி, அம்பந்தோட்டை, அனுராதாபுரம், திருகோணமலை, பொலநறுவை, அம்பாறை, மாத்தளை, காலி, மட்டக்களப்பு, கண்டி ஆகிய இடங்களிலுள்ள பல கிராமங்கள் இத்திட்டத்திற்காக தெரிவு செய்யப்பட்டுள்ளன.

இலங்கையின் ஒரேஞ்சுக்கு சர்வதேச சந்தையில் பாரிய தேவை உருவாகியுள்ளதுடன், சர்வதேச சந்தையில் ஒரேஞ்சுப் பழத்தின் மீதான ஏகபோக உரிமை இலங்கைக்கு இருப்பதாக விவசாய அமைச்சு தெரிவித்துள்ளது. (நி-5-6)

# வெங்காயத்தின் விலை அதிகரிக்கும் அபாயம்!

(கொழும்பு)

இலங்கைக்கான பெரிய வெங்காய ஏற்றுமதிக்கு பாகிஸ்தான் அரசு தடை விதித்தால் புத்தாண்டு பண்டிகையின் போது ஒரு கிலோகிராம் பெரிய வெங்காயத்தின் விலை 700 அல்லது 800 ரூபாயாக உயரக்கூடும் என வெங்காய இறக்குமதியாளர்கள் தெரிவித்துள்ளனர்.

இது குறித்து அவர்கள் மேலும் தெரிவித்துள்ளதாவது, நாட்டில் பெரிய வெங்காயத்துக்கு தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. அதே சமயம் வளைகுடா பகுதிக்கான வெங்காய ஏற்றுமதியை பாகிஸ்தான் அரசு நிறுத்தி வருகின்றது.

இந்நிலையில் இந்தியாவில் இருந்து பெரிய வெங்காயத்தை இறக்குமதி செய்வது மலிவாக இருப்பதால் இதற்கு அரசாங்கத்தின் தலையீடு தேவையாக உள்ளது என அவர்கள் தெரிவித்துள்ளனர். (நி-5-6)

# அதிகரிக்கும் சிறுவர் துஷ்பிரயோகங்கள்

(கொழும்பு)

சிறுவர் துஷ்பிரயோக சம்பவங்களின் பதிவுகள் அண்மைக் காலமாக அதிகரித்துள்ளதாக தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபையின் தலைவர் சிரேஷ்ட விரிவுரையாளர் உதய குமார அமரசிங்க தெரிவித்தார்.

சிறுவர் துஷ்பிரயோகம் தொடர்பில் 2022 ஆம் ஆண்டில் 1,618 முறைப்பாடுகளும் 2023 ஆம் ஆண்டில் 1,639 முறைப்பாடுகளும் பதிவு செய்யப்பட்டுள்ளன.

எனவே, உரிய தெளிவுப்படுத்தல்கள் மூலம் சிறுவர் துஷ்பிரயோகங்களை தடுக்க முடியும் எனவும் அவர் தெரிவித்தார். (நி-5-6)

# சாந்தன் மரணம் இயற்கையானது இதை அரசியலாக்க வேண்டாம்

## வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சர்

(கொழும்பு)

சாந்தனின் மரணம் இயற்கையானது. அவரை குடும்பத்துடன் ஒன்று சேர்ப்பதற்கு மனிதாபிமான அடிப்படையில் நடவடிக்கைகளை முன்னெடுத்தோம். எனினும் இந்தியா அனுமதி வழங்கவில்லை. எனவே பொய்யான குற்றச்சாட்டுக்களை முன்வைக்க வேண்டாம் என வெளிநாட்டலுவல்கள் அமைச்சர் அலிசப்ரி தெரிவித்துள்ளார்.

பாராளுமன்றில் நேற்று முன்தினம் இடம்பெற்ற அமர்வில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் பாராளுமன்ற உறுப்பினர் செல்வராசா கஜேந்திரன் சாந்தனின் மரணம் தொடர்பாக பேசியபோது அவருக்கு பதிலளிக்கையில் இவ்வாறு தெரிவித்தார்.

இது தொடர்பில் மேலும் கருத்து தெரிவித்த அவர், சாந்தன் இந்தியாவின் முன்னாள் பிரதமரின் கொலையுடன் தொடர்புடைய குற்றவாளியாவார். இந்தியாவிலேயே அவர் தடுத்து வைக்கப்பட்டிருந்தார்.

அவரை இலங்கைக்கு அழைத்து வருவது தொடர்பில் வடக்கு பாராளுமன்ற உறுப்பினர்கள் கோரிக்கைகளை முன்வைத்திருந்தனர். இந்நிலையில் மனிதாபிமான அடிப்படையில் சாந்தனை இலங்கைக்கு அழைத்து வந்து அவரின் உறவினர்களுடன் இணைக்க அரசாங்கம் முயற்சித்தது.

ஆனால் இந்திய அரசிடம் இருந்து சாதகமான பதில்கள் உடனடியாக கிடைக்கவில்லை.



இந்நிலையில் நோயால் பாதிக்கப்பட்டிருந்த சாந்தன் உயிரிழந்துவிட்டார். இது இயற்கை மரணமே. இதனால் இந்த விடயத்தை அரசியலுக்கு பயன்படுத்த வேண்டாம். அனைத்துக்கும் எதிர்ப்பு தெரிவிக்கும் நிலையில் இருந்து விடுபடுங்கள் என அவர் தெரிவித்தார். (நி-5-6)

# புதிய திருத்தங்களுடன் 'அஸ்வெசும'

(கொழும்பு)

அஸ்வெசும நலன்புரி முறைமையின் ஊடாக, மாற்றுத் திறனாளிகளுக்கும் சிறுநீரக நோயாளிகளுக்கும் முதியோர் உதவி பெறும் நபர்களுக்கும் விசேட கொடுப்பனவை வழங்க நிதி அமைச்சு தீர்மானித்துள்ளது.

அத்துடன் இது தொடர்பான கொடுப்பனவுகள் ஏப்ரல் மாதம் முதலாம் திகதி முதல் அமுலுக்கு வரும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன்படி, உதவி பெறும் மாற்று திறன்களைக் கொண்ட 410,000 பேருக்கு தலா 7,500 ரூபா மாதாந்த கொடுப்பனவும் சிறுநீரக உதவி பெறும் 50 ஆயிரம் பேருக்கு தலா 7,500 ரூபா கொடுப்பனவும் முதியோர் உதவி பெறும் 820,000 பேருக்கு தலா 3,000 ரூபாய் கொடுப்பனவும் வழங்கப்படவுள்ளதாக நிதியமைச்சு தெரிவித்துள்ளது. (நி-5-6)

# கத்தரிக்காயில் ஆபத்தான கிருமிநாசினிகள்

## ஆய்வில் வெளியான தகவல்

(கொழும்பு)

சந்தையில் விற்பனை செய்யப்படும் கத்தரிக்காயில் மனித உடலுக்கு ஆபத்தான கிருமிநாசினிகள் காணப்படுவதாக ஆய்வுகள் மூலம் தெரியவந்துள்ளது.

ஶ்ரீஜயவர்தனபுர பல்கலைக் கழகத்தின் உணவு விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப ஆய்வு நிறுவனம் இது தொடர்பிலான ஆய்வினை நடத்தியுள்ளது.


சந்தையில் கிடைக்கப் பெற்ற 23 வீதமான கத்தரிக்காய் வகைகளில் மனிதனுக்கு ஆபத்து ஏற்படுத்தக் கூடிய கிருமிநாசினிகள் காணப்படுவது கண்டறியப்பட்டுள்ளது.

மரக்கறி மற்றும் பழ வகைகளை குளிர்ந்த நீரில் கழுவுவதனை விடவும், குளிர்ந்த நீருடன் வினாகிரி அல்லது உப்பு சேர்த்து கழுவுவதன் மூலம் கிருமிநாசினிகளை நீக்க முடியும் என ஶ்ரீஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தின் சிரேஷ்ட பேராசிரியர் கலாநிதி பியூமி அபேசுந்த அறிவுறுத்தியுள்ளார்.

மேலும் பழங்கள் மற்றும் மரக்கறி வகைகளில் காணப்படும் தோலினை நீக்குவதன் மூலம் இலகுவில் அவற்றின் மேற்பரப்பில் காணப்படும் கிருமிநாசினிகள் அல்லது விஷ இரசாயனங்களை அகற்றிக்கொள்ள முடியும் என அவர் தெரிவித்துள்ளார். (நி-5-6)




புளியம்பொக்கணை நாகதம்பிரான் ஆலய பரிபாலன சபை



வர்த்தக நிலையங்களுக்கான ஏலம் விடுதல்

கரைச்சி புளியம்பொக்கணை நாகதம்பிரான் ஆலயத்தின் வருடாந்த பொங்கல் உற்சவம் எதிர்வரும் 24.03.2024 ஆம் திகதி நடைபெறவுள்ளது. பொங்கல் உற்சவ காலங்களில் வியாபாரம் செய்கின்ற வர்த்தகர்களுக்கான "கடை ஏலம் விடுதல்" எதிர்வரும் 10.03.2024 ஆம் திகதி மு.ப 10.00 மணிக்கு ஆலய முன்றலில் இடம்பெறும் என்பதை வியாபாரம் செய்ய ஆர்வமுள்ள வர்த்தகர்களுக்கு அறியத் தருகின்றோம்.

குறிப்பு:
- ஏலத்தின்போது முழுத்தொகையும் செலுத்தப்படல் வேண்டும்.
- பொலித்தீன் தடைசெய்யப்பட்டுள்ளது.

(C-8488)

ஆலய பரிபாலன சபை
கரைச்சி புளியம்பொக்கணை நாகதம்பிரான் ஆலயம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 117ஆவது ‘வடக்கின் பெரும் போர்’

# ‘நெருப்பாக’ கவிசன், மாதுலன் ‘சிறப்பாக’ சென்.ஜோன்ஸ்

### யாழ்.மத்திய கல்லூரியின் துடுப்பாட்டம், பந்துவீச்சு சோடை போனது

“வடக்கின் போர்” என வர்ணிக்கப்படும் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரிக்கும் யாழ்ப்பாணம் பரியோவான் கல்லூரிக்கும் இடையிலான நூற்றாண்டு கால கிரிக்கெட் போட்டி நேற்று கோலாகலமாக ஆரம்பமானது.



117ஆவது முறையாக இடம்பெறும் இப்போட்டி, இம்முறையும் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி மைதானத்தில் நேற்று முதல் நாளை வரை மூன்று தினங்களாக நடைபெறுகிறது.

ஆரம்ப நிகழ்வு காலை 9 மணியளவில் இரண்டு கல்லூரி கீதங்களுடன் ஆரம்பித்ததுடன் இரண்டு கல்லூரி அணி வீரர்களும் கைலாகு கொடுத்து அறிமுகப்படுத்தினர்.


நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தது.

அந்த வகையில் முதலில் துடுப்பெடுத்தாடிய யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி அணி, யாழ்ப்பாணம் பரியோவான் கல்லூரி அணியின் அபார பந்துவீச்சில் தடுமாறி 56.5 பந்துப் பரிமாற்றங்கள் நிறைவில் 157 ஓட்டங்களுக்கு சகல விக்கெட்டுகளையும் இழந்தது.

யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி அணி சார்பில் சயந்தன் 55 ஓட்டங்களையும், நியூட்டன் 24 ஓட்டங்களையும், சிமில்டன் 22 ஓட்டங்களையும் அதிகபட்ச ஓட்டங்களாகப் பெற்றுக் கொண்டனர்.

பந்துவீச்சில் யாழ்ப்பாணம் பரியோவான் கல்லூரி அணி சார்பில் கவிசன் 5 இலக்குகளையும் மாதுலன் 3 இலக்குகளையும் றன்டியோ ஒரு இலக்கையும் கைப்பற்றினார்.






தொடர்ந்து தமது முதல் இன்னிங்ஸூக்காக துடுப்பெடுத்தாடக் களமிறங்கிய யாழ்ப்பாணம் பரியோவான் கல்லூரி அணி நேற்றைய முதல் நாள் ஆட்ட நேர முடிவில் 30.5 பந்துப் பரிமாற்றங்களை எதிர்கொண்டு இரண்டு இலக்குகளை மாத்திரம் இழந்து 109 ஓட்டங்களைப் பெற்று வலுவான நிலையில் உள்ளது.

யாழ்ப்பாணம் பரியோவான் கல்லூரி சார்பில் அபியோய்சாந் 39 ஓட்டங்களையும் கிந்துசன் 21 ஓட்டங்களையும் பெற்று ஆட்டமிழந்தனர்.

சச்சின் கணபதி 37 ஓட்டங்களை பெற்று நிதானமாக ஆடி வருகிறார்.

பந்து வீச்சில் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி அணி சார்பில் அனுசாந் மற்றும் திஷோன் ஆகியோர் தலா ஒரு விக்கெட்டை கைப்பற்றியுள்ளனர்.

கடந்த வருட வெற்றியை இம்முறையும் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி தக்க வைக்குமா? அல்லது யாழ்ப்பாணம் பரியோவான் கல்லூரி பழி தீர்க்குமா? என்ற எதிர்பார்ப்பு இரு கல்லூரி மாணவர்கள் பழைய மாண வர்கள் மற்றும் கிரிக்கெட் இரசிகர்களிடம் காணப்படுகிறது. (ந-7,10,33)

# பிளே ஒப் சுற்று II இற்கு தகுதிபெற்ற கே.சீ.சீ.சீ


சிறந்த வீரர் சாம்பவன்



விக்கிரம் - ராஜன் கங்கு வெற்றிக்கிண்ண தொடரில் இரு பிரிவுகளிலும் 2 ஆம் இடத்தைப் பெற்ற ஜொலிஸ்ரார், கே.சீ.சீ.சீ அணிகள் பிளே ஒப் எலிமினேற்றர் போட்டியில் கலந்து கொண்டு மோதின. கே.சீ.சீ.சீ அணி ஜொலிஸ்ரார் அணியை 5 இலக்குகளால் வெற்றி பெற்று பிளே ஒப் தகுதி சுற்று II இற்கு தகுதி பெற்றுள்ளது.

விலகல் போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய ஜொலிஸ்ரார் அணி 29.3 ஓவர்களில் சகல இலக்குகளையும் இழந்து 142 ஓட்டங்களைப் பெற்றது. சஜீசன்-53, வாமணன்-25, கோபிராம் -14 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டனர். பந்து வீச்சில் கே.சீ.சீ.சீ அணியை சார்ந்த சாம்பவன் 13 ஓட்டங்களைக் கொடுத்து 4 இலக்குகளையும் துஸ்யந்தன்-27 ஓட்டங்களை கொடுத்து 2 இலக்குகளையும் சத்யன் 28 ஓட்டங்களை கொடுத்து 2 இலக்குகளையும் கைப்பற்றினர்.

143 ஓட்டங்களை வெற்றி இலக்காகக் கொண்டு களமிறங்கி கே.சீ.சீ.சீ அணி 26 ஓவர்களில் 5 இலக்குகளை இழந்து 148 ஓட்டங்களை பெற்றுள்ளது.

சத்யன்-48, ஜெயரூபன்-39, பிரவீன்-37 ஓட்டங்களைப் பெற்றுக்கொண்டனர். பந்து வீச்சில் ஜொலிஸ்ரார் அணியை சார்ந்த துஸ்யந்தன் 25 ஓட்டங்களை கொடுத்து 2 இலக்குளையும் மதூஸன் 11 ஓட்டங்களைக் கொடுத்து 1 இலக்கினையும் கைப்பற்றினர்.

குறித்த போட்டியில் கே.சீ.சீ.சீ அணியை சார்ந்த சாம்பவன் 06 ஓவர்களில் 13 ஓட்டங்களைக் கொடுத்து 4 இலக்குகளை கைப்பற்றி சிறந்த வீராக தெரிவு செய்யப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (நி-5-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மகத்துவம் நிறைந்த மஹா சிவராத்திரி

பக்தி சிரத்தையுடன் ஆண்டுதோறும் கோவில் வழிபாடு, உபவாசம், நித்திரை துறத்தல் என மிகவும் உணர்ச்சி பூர்வமாகக் கொண்டாடப்படும் சைவத்திருநாளே சிவராத்திரி ஆகும். நல்லவை எல்லாம் நடந்திட்டட்டும் எம் வாழ்விலே என்ற அயராத அன்புடன் இறையுணர்வு வளர்த்துக் கொண்டாடப்படும் பண்டிகைகளின் பின்னணியில் ஆன்மீக உண்மையும் பிழிந்தெடுத்த சாராம்சமும் இரண்டறக் கலந்து காணப்படும் என்பது யாவரும் அறிந்த உண்மையாகும். அந்த வகையில் சிவராத்திரி நன்நாளின் பின்னணியில் உள்ள உண்மைகளைச் சிறிது நோக்குவோம்:

சிவராத்திரிக்கு மற்றைய எல்லா சைவப்பண்டிகைகளையும் விட ஒப்பிலாத் தனிச் சிறப்புண்டு. வரலாற்று அடிப்படை, புதைபொருளாராய்ச்சி, சாஸ்திர இதிகாசங்கள் மற்றும் தொன்றுதொட்டுக் கடைப்பிடிக்கப்படும் பழக்கவழக்கங்கள் என சிவராத் திரியின் மகிமையின் வாசத்தினைப் பறைசாற்றிடவென பல மலர்களுண்டு. ஆதாரமாக...ஸ்ரீ இராமபிரான் மற்றும் ஸ்ரீ கிருஷ்ண வழிபாடுகளுக்கு முற்பட்ட காலந்தொட்டே சிவவழிபாடு நிலவியதற்கான தொல்பொருட் சான்றுகளாய் மொஹஞ்சதாரோ மற்றும் ஹரப்பா நகரங்கள் விளங்குகின்றன. துவாபர யுகத்தில் பக்தி மார்க்கத்தின் ஆரம்பத்தில், லிங்க வழிபாடு மிகவும் பிரபல்யமாக இருந்தது. சிவபுராணம், லிங்கபுராணம், ஸ்கந்தபுராணம் என பலவகையான புராண இதிகாசங்கள் சிவமகிமையை எடுத்துச் சொல்லுகின்றன. பதஞ்சலி மற்றும் கௌசல்யர் போன்ற பிரசித்தமான முனிவர்களின் சாஸ்திரங்களும் சிவனின் புகழ்பாடுகின்றன. புராதன இந்திய வரலாற்றில் சிவன் மாத்திரமின்றி சிவ அடியார்களும் பிரத்தியேகமான இடத்தினைக் கொண்டிருந்தார்களென்பது வெளிப்படையாகவே தெரிகின்றது. வடக்குப் பகுதியில் விக்கிரமாதித்த மன்னனே சிவ வழிபாட்டுக்கு வித்திட்ட ஆரம்ப கர்த்தாவாக விளங்குகின்றான். இந்தியத்தேசம் பூராக பல்லாயிரக்கணக்கான சிவாலயங்கள் மற்றும் மடங்கள் கட்டப்பட்டும் விசேடமான வழிபாட்டுச் சம்பிரதாயங்கள் செழிப்படைந்துள்ளதைக் கண்கூடாகக் காணக் கூடியதாக உள்ளது. இவற்றுள் 12 ஜோதிலிங்க ஆலயங்கள் உச்ச தானத்தைப் பிரதிநிதித்துவம் செய்கின்றன. இந்தியா மட்டுமே சிவ வழிபாடு இடம் பெற்ற தானம் எனக் குறிப்பிடுவதற்கல்ல. இந்திய எல்லைகளைத் தாண்டி, புராதன நாகரிகங்கள் சிறப்பாக விளங்கிய எகிப்து, கிறீஸ், ரோம் போன்ற ஐரோப்பிய தேசங்களிலும் அகழ்ந்தெடுக்கப்பட்ட அடையாள எச்சங்கள் சிவ வழிபாட்டின் புராதனத் தன்மைக்குச் சான்று பகர்கின்றன. ஆயினும் இந்தியாவிலும் சரி, அதற்கு அப்பாலும் லிங்கம் போன்ற ஓர் உருவத்தின் அடிப்படையே வழிபாட்டின் பிரதான கருப்பொருளாய் அமைந்திருத்தலானது, சிவனின் ஜோதிப் பிழம்பு வடிவத்தின் பிரதிபலிப்பினை ஆழமாக நிரூபிக்கின்றது. ஆரம்ப காலத்தில் தூய சிவ வழிபாடு மாத்திரமே நிலவினும், அதனைத் தொடர்ந்து ஏனைய தேவர்களை வழிபடும் நடைமுறை ஆரம்பித்தது. ஆரம்பத்தில் நடைமுறையிலிருந்த அவ் லிங்க வழிபாடானது பின்னர் படிபடிப்படியாக ஏனைய மூர்த்திகளின் உருவ வழிபாட்டுக்கு விஸ்தரிக்கப்பட்டது.

சிறந்த உதாரணமாக ஸ்ரீ இராமர் மற்றும் ஸ்ரீ கிருஷ்ணர் போன்ற திருமூர்த்திகளின் உருவ வழிபாடு நிலவியமை மிகவும் தெட்டத் தெளிவான, தற்போதும் நடைமுறையிலிருக்கின்ற ஒரு விடயமாகும். தெய்வீக மூர்த்திகள் வழிபடத் தகுதிவாய்ந்தவர்கள் என்பதில் ஐயமேதுமில்லை. ஆயினும், சிவனுக்கும் இம் மூர்த்திகளுக்கும் ஓர் அடிப்படை வேறுபாடுண்டு. அவர்கள் தாய்வயிற்றில் சுமக்கப்பட்டு பிறப்பெடுத்து



வளர்ந்து, சிறுவர்களாயிருந்து, குருவிடம் பயின்று வாழ்ந்து சென்ற வரலாற்றைக் கொண்டுள்ளவர்கள். ஆயினும் சிவ பகவானுக்கு இத்தகைய வாழ்வு வரலாறு எதுவும் கிடையாது. அவர் ஒளியுருவமாகக் கருதப்பட்டதாலேயே ஜோதிலிங்க வழிபாடு நிலவியது, நிலவுகின்றது. ஆலயங்களில் அர்ச்சனைகளின் போது கூட, "பிரம்ம தேவதாய நமஹ" விஸ்ணு தேவதாய நமஹ" சங்கர தேவதாய நமஹ" என அர்ச்சிக்கப்படினும், "சிவ" பரமாத்மாய "நமஹ" எனவே வழங்கப்படுகின்றது. இந்நடைமுறை உதாரணமாவது, பரமாத்மா மற்றும் இதர தேவர்களுக்கிடையிலான வேறுபாட்டைத் தெளிவாக புலப்படுத்துகின்றது. அதாவது, தேவர்கள் அனைவரும், தெய்வாம்சமுள்ள ஜீவாத்மாக்களாக உள்ள அதே சமயம், பரமாத்மா எனப்படுபவர். சகல தெய்வாம்சங்களும் நிறையப்பெற்றதோடன்றி, அவற்றினை நிரந்தரமாக -நிலையாகக் கொண்ட ஒப்பற்ற சக்தியாவார் என்பதே பொருத்தமான விளக்கமாகும். இன்னும் சிறப்பாகக் கூறுவதாயின், தெய்வீக அம்சங்களினை தேவர்கள் பெற்றமையானது, அத்தகைய தெய்வீக அம்சங்களை நிலையாகவும் சாகரமாகவும் கொண்ட பரமாத்மாவிடமிருந்தேயாகும் என்பதே சாலப்பொருத்தமானதாகும்.

இத்தகைய பெரும் புகழ்வாய்ந்த ஆத்மாக்களுக்கெல்லாம் தந்தையாகிய ஸ்ரீ சிவபகவானின் புனித அவதார தினமே சிவ இராத்திரி என வழங்கப் பெறுகின்றது. சிவபகவானுடைய பூலோக வருகையானது "சிவ இராத்திரி" எனச் சிறப்பிக்கப்படுவதற்கான காரணம் யாதென்ற வினா எழுகின்றது. ஆம் "சிவனின் பூலோகத் திரு அவதாரம் இடம்பெறும் காலம், பூவுலகு அஞ்ஞானம் என்ற இருள் கவிந்து அல்லலுறும் கரிக் காலமாகும். அஞ்ஞானத்தின் வியாபகத்துக்குள் அனைத்தையும் தொலைத்துவிட்ட மனிதன், இறுதியாக தன் மனிதத்தின், அதாவது சுயத்தின் இருப்பையும் தொலைத்துவிட்டு, தான் யார் என்ற வினாவுக்கே விடை புரியாது அலையும் காலமே கரிய இருள் சூழ் கலிகாலமாகும். தன்னைப் பற்றிய அடையாளத்தையே தொலைத்து விட்ட மனிதன், தன் ஆத்ம தந்தை தொடர்பான அறிவையும் சேர்த்தே தொலைத்து விட்டான். அதனாலேயே கட்டுங்கடங்காத அதர்மம் தலைவிரித்து நிற்கிறது பூமியிலே. அதர்மம் வியாபிக்கின்ற நேரமதில், தர்மத்தின் வாழ்வினைச் சூதுகவ்வும் காலமதில், புண்ணிய அவதாரமெடுக்கிறார் பரமாத்மா. மீண்டும் தர்மத்தினைச் செழிக்கச் செய்து மானுடத்துக்குள் குடிபுகுந்துள்ள அரக்க குணங்களைச் சம்ஹாரம் செய்து புதிய உலகு படைப்பதே ஸ்ரீ சிவ பரமாத்மாவின் திவ்ய குறிக்கோளாகும். தனது அறியாமை இருளினின்று விடுபட வேண்டு மென பகீரதப் பிரயத்தனம் செய்தும் மானுடனால் அதிலிருந்து விடுபடமுடியவில்லை. எனவே மனிதனை விடுவிக்கும் பொறுப்பை, பிறவிச் சக்கரத்துக்கு அப்பாற்பட்ட கடவுளின் காரியமாக ஆகின்றது.

இத்தகைய உயரிய குறிக்கோளுடன் திவ்ய அவதாரம் புரியும் பகவான், சாதாரண ஜீவாத் மாக்களைப் போன்று கருப்பைக்குள் புகுந்து, கர்ப்ப வாசம் புரிந்து, சாதாரண பிரசவ வட்டத்துக் குள்ளே அன்றி, அவரது பிறப்பானது, திவ்ய அவதாரமாகவே நிகழப்பெறுகின்றது. எந்த விதமான கர்ம பந்தனங்களுக்கும் உட்படாத சிறப்பம்சத்தைக் கொண்ட சிவபகவான் மானுடரைப்போன்றது அல்லாது, மிகவும் தெய்வீகத் தனித் தன்மை பொருந்திய பிறப்பையும், பிறப்பின் பின் தெய்வீகக் கைங்கரியங்களையும் கொண்டிருத்தலானது ஆச்சரியமற்ற விடயமே. ஆயினும் பிறவிகள் பலவற்றில் தான் பின்பற்றிய உண்மையான ஆன்மீகச் சாரத்தை மானுடம் எப்போதும் கொண்டு இருக்கின்றது. கடவுள், அவரது வசிப்பிடமான பரலோகம் போன்ற விடயங்கள் பெரும் சர்ச்சைக்குரியவையாக இருப்பினும் அவை பற்றிய புரிந்துணர்வில் மனிதனுக்கு இன்னமும் நாட்டம் மீதமிருப்பதற்குக் காரணமே இது தான் என்றால் அது மிகையாகாது.

அனைத்து சக்திகளும் நிரம்பியவராகிய இறைவன், மனிதனைத் தடுத்தாட்கொள்ளும் காருணியத்தினை வெறும் மாயஜால வித்தை போலன்றி, அறியாமை இருளைப் போக்கிட ஞானமென்ற ஒளியைத் தந்து ஈடேற்றுகிறார். தான் யார், தன் தந்தை யார், சூழவுள்ளோர் யாவர், விதி என்றால் என்ன என சகல விதமான ஆன்மீகத்தையும் உணர்ந்து கொண்டு பூரணத்துவம் அடையும் மனிதன், மூர்ச்சித்து விழுந்து கிடந்தவன், மயக்கம் தெளிந்து எழுந்தாற்போல, புத்துணர்ச்சியுடன் புது வேகம் பெறுகின்றான்.

எனவே மங்களகரமான இன் நன்நாளாகிய எமது ஆத்ம தந்தையின் அவதாரத் தினத்திலே, சரீர தாரிககளாகிய நாம் அனைவருமே அத் தந்தையின் தெய்வீகக் குழந்தைகளாகையால், ஒருவருக்கொருவர் சகோதரர்களாகின்றோம். அச்சகோதர நேசத்தை எமக்குள் வித்திட்டு வேரூன்றி, இறை சிந்தனையுடன் வாழ்வாங்கு வாழ்வோமாக.

**பிரம்ம குமாரிகள்,**
**இராஜயோக நிலையம்,**
**யாழ்ப்பாணம்.**

# கட்டுப்பாட்டை இழந்த பாரவூர்தி கட்டடத்துடன் மோதி விபத்து

(யாழ்ப்பாணம்)

யாழில் வேகக் கட்டுப்பாட்டை இழந்த பாரவூர்தி ஒன்று கடை கட்டடத்துடன் மோதி விபத்துக்குள்ளானது. பருத்தித்துறை வீதியூடாக யாழ்ப்பாணம் நோக்கி பயணித்த பாரவூர்தி நேற்று நல்லூர் ஆலயத்துக்கு முன்பாக உள்ள வளைவில் திரும்பும் போது குறித்த விபத்து சம்பவித்துள்ளது. இதில் பாரவூர்தியின் முன் பக்கம் கடுமையாக சேதமடைந்ததுடன் கடையும் சேதமடைந்துள்ளது. விபத்தில் சாரதி காயங்களுக்கு உள்ளாகியுள்ள நிலையில் யாழ். போதனா மருத்துவமனையில் அனுமதிக்கப் பட்டுள்ளார்.

இதேவேளை அருகில் இருந்த முச்சக்கர வண்டி தரிப்பிடத்தில் இருந்த முச்சக்கர வண்டியொன்றும் சேதத்திற்குள்ளானது. சம்பவம் தொடர்பாக யாழ். பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ரி-6-6-33)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முறையற்ற இடமாற்றங்களை இடைநிறுத்துமாறு கோரிக்கை

## இலங்கை கல்வி நிர்வாக சேவை உத்தியோகத்தர்கள் சங்கம்

(யாழ்ப்பாணம்)

வடக்கு மாகாண கல்வி அமைச்சு செயலாளரின் NP/03/02/GA/I/SLEAS Transfer இலக்கமிடப்பட்டதும் 2024.01.16 ஆம் திகதிய கடிதம் மூலம் வெளியிடப்பட்டுள்ள இடமாற்றப்பட்டியலின்படி இலங்கை கல்வி நிர்வாக சேவை உத்தியோகத்தர்களான எமது சங்க உறுப்பினர்கள் தமக்கு வழங்கப்பட்டுள்ள வருடாந்த இடமாற்றங்கள் முறையற்றதும் பாரபட்சமானதெனவும் தெரிவித்துள்ளனர்.

வடமாகாண ஆளுநருக்கு அனுப்பி வைத்த கடிதத்திலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதில் தெரிவிக்கப்பட்டதாவது.

● 32/2022 ஆம் இலக்க தேசிய இடமாற்றக் கொள்கை சுற்றறிக்கையின் உபபிரிவு 2.3 இன் குறிப்பு (i) இன் படி ஒரு சேவை நிலையத்துக்கு ஆறு வருட சேவையைப் பூர்த்தி செய்த இலங்கை கல்வி நிர்வாக சேவை உத்தியோகத்தர்களுக்கு இடமாற்றம் வழங்குவது என்பது வடக்கு மாகாண கல்வி அமைச்சின் இடமாற்றச் சுற்றறிக்கையில் ஐந்து ஆண்டுகளாக சுருக்கப்பட்டு மாவட்டங்களுக்கு இடையிலான இடமாற்றமாக மாறப்பட்டிருப்பது அடிப்படையில் தவறானதும் எமது உத்தியோகத்தர்களைப் பாதிப்படையச் செய்வதுமாகும்.

● ஒரு சேவை நிலையத்தில் இருந்து 50 வீதத்துக்கு உட்பட்ட உத்தியோகத்தர்களையே இடமாற்றம் செய்ய முடியும். ஆயினும் வடக்கு மாகாணத்தில் உள்ள பாடசாலைகளை தவிர்ந்த சேவை நிலையங்களில் வடக்கு மாகாண கல்வித் திணைக்களம் தவிர்ந்த ஏனைய இடங்களில் 50 வீதத்துக்கு மேலாக உத்தியோகத்தர்கள் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர்.

தீவக வலயத்தில் 100 வீதம் உத்தியோகத்தர்கள் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர். வடக்கு மாகாண கல்விக் கட்டமைப்பில் பாரிய சிதைவை இது ஏற்படுத்தியுள்ளது என்பதுடன் எமது உத்தியோகத்தர்களையும் அசௌகரியப்படுத்தியுள்ளது.

● 32/2022 ஆம் இலக்க தேசிய இடமாற்றக்கொள்கை சுற்றறிக்கையின் பிரிவு 5.12 இல் குறிப்பிடப்பட்ட "இடமாற்ற சபையினால் உத்தியோகத்தர்களை இடமாற்றம் செய்யும் போது உரிய நிறுவகத்தின் பணிக் குழுவின் கனிஷ்ட/சிரேஷ்ட சம நிலையைக் காப்பதற்கு எப்போதும் முயற்சி செய்ய வேண்டும்" என்பது மீறப்பட்டுள்ளது. இது சிரேஷ்ட/கனிஷ்ட உத்தியோகத்தர்களின் உரிமையை பறிப்பதாகும்.

● வடக்கு மாகாண இடமாற்றக் கொள்கை, உத்தியோகத்தர்களின் நலன்களைப் பாதிக்கும் வகையிலும் பக்கசார்பான தீர்மானங்களை மேற்கொள்ளத் தக்க வகையிலும் அமைந்திருப்பது முறைகேடுகளுக்கு மேலும் வழிவகுக்கும்.

● வடக்கு மாகாண இடமாற்றக் கொள்கையை மீறும் வகையில் 2024 ஆம் ஆண்டுக்கான இடமாற்றத்தில் சிலரை மாவட்டத்துக்குள் இடமாற்றம் செய்திருப்பதும் மேன்முறையீட்டின் பின்னர் மேலும் சிலருக்கு சலுகை வழங்கப்பட்டிருப்பதும் நடைபெற்றுள்ளது. இது வடக்கு மாகாணக் கல்வி அமைச்சின் பாரபட்சம், முறைகேடு மற்றும் சிலரைப் பாதுகாத்து சிலரைப் பழிவாங்கும் செயற்பாட்டை வெளிப்படுத்துவதாக உணர முடிகிறது.

● இடமாற்றக் கொள்கை தயாரிப்பு, மற்றும் இடமாற்றக் குழுச் செயற்பாட்டில் எந்தவொரு இலங்கை கல்விநிர்வாக சேவைத் தொழிற் சங்கத்தினதும் பிரதிநிதித்துவம் இடம் பெறாமை அடிப்படையில் மிகத் தவறான தாகும். இதுவும் முறைகேடுகளுக்கு வழிவகுத்துள்ளது என்பதைச் சுட்டிக் காட்டுகிறோம்.

● திணைக்களத் தலைவரே இடமாற்றக் கொள்கை தயாரிப்பிலும் இடமாற்ற சபையிலும் இடம்பெற்றிருப்பது தவறானதாகும். இதன் மூலம் அதிகார துஷ்பிரயோகம் மற்றும் முறைகேடுகள், பழிவாங்கல்கள் இடம் பெற்றிருக்கிறது என்ற எமது உறுப்பினர்களின் குற்றச்சாட்டு மேலும் உறுதி செய்யப்பட்டிருக்கிறது.

எனவே எமது உறுப்பினர்களான உத்தியோகத்தர்களைப் பாதிப்படையச் செய்யும் வடக்கு மாகாண இடமாற்றக் கொள்கையை தேசிய இடமாற்றக் கொள்கைக்கமைவாகத் திருத்தம் செய்யவும் இதனைத் திருத்தும் போது மற்றும் இடமாற்றச் சபைச் செயற்பாட்டின்போது சங்கத்தின் பிரதிநிதித்துவத்தை உறுதி செய்யவும் தவறான இடமாற்றத்தை இடைநிறுத்தவும் நடவடிக்கை எடுக்குமாறு தங்களைக் கேட்டுக் கொள்கிறோம் என அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (நி-5-6)

# கந்தர்மடம் பலாலி வீதியில் மதுபானசாலை அமைக்க எதிர்ப்பு

## நல்லூர் பிரதேச செயலரிடம் மகஜர் கையளிப்பு

(யாழ்ப்பாணம்)

மக்கள் செறிந்து வாழும் யாழ்ப்பாணம் கந்தர்மடம் பலாலி வீதிப்பகுதியில் புதிதாக மதுபான சாலை அமைப்பதற்கு அனுமதி அளிக்க வேண்டாம் எனப் பொது மக்கள், சமூக ஆர்வலர்கள், இந்து ஆலயங்களின் நிர்வாகிகள் நல்லூர்ப் பிரதேச செயலரிடம் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இது தொடர்பில் நல்லூர் பிரதேச செயலரிடம் மகஜர் ஒன்றும் கையளிக்கப்பட்டுள்ளது.

அந்த மகஜரில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

இல.257 பலாலி வீதி, கந்தர்மடம் பகுதியில் புதிதாக மதுபானசாலை அமைக்கும் முயற்சிகள் நடைபெறுகின்றன.

பாடசாலைகள், மருத்துவ மனைகள், ஆலயங்கள் என்பன இப்பகுதியில் அமைந்துள்ளதுடன் பாடசாலை செல்லும் மாணவர்கள், பல்கலைக்கழகம் செல்லும் மாணவர்கள் எனப் பலதரப் பட்டவர்களின் பிரதான பாதையாகவும் இப்பகுதி காணப்படுகிறது.

கலாசார சீரழிவுகள், போதைப் பாவனைகள் தற் காலத்தில் தடுத்து நிறுத்த முடியாதளவிற்கு தலைதூக்கியுள்ளன.

அவற்றிலிருந்து இளம் சமுதாயத்தைப் பாதுகாப்பது நம் ஒவ்வொருவரின் கடமை. எனவே இந்த மதுபானசாலையை அமைக்கப் பிரதேச செயலகம் அனுமதி வழங்க கூடாது என அதில் குறிப்பிடப்பட்டுள்ளது. (நி-5-6)

# கல்மடுக்குளத்தின் கீழ் 2011 ஏக்கரில் நெற்செய்கை

(கண்டாவளை)

கிளிநொச்சி கல்மடுக் குளத்தின் கீழ் இவ்வாண்டு 2011 ஏக்கர் நிலப்பரப்பில் நெற்செய்கையும் 50 ஏக்கர் நிலப்பரப்பில் சிறு தானிய செய்கையும் மேற்கொள்ளப்படவுள்ளன.

கிளிநொச்சி கண்டாவளை பிரதேசத்தில் உள்ள மிகப்பெரிய குளமான கல்மடுக் குளத்தின் கீழான சிறுபோக பயிர்ச்செய்கை மேற்கொள்வது தொடர்பான கூட்டம் நேற்று முன்தினம் மாவட்ட மேலதிக அரச அதிபர் எஸ்.முரளிதரன் தலைமையில் கண்டாவளை பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றது.

இதன்போது இவ்வாண்டு 2011 ஏக்கர் நிலப்பரப்பில் சிறுபோக நெற்செய்கையும் 50 ஏக்கர் நிலப்பரப்பில் உப உணவு பயிர்ச் செய்கையும் மேற்கொள்வது என தீர்மானிக்கப்பட்டது.

மேற்படி கலந்துரையாடலில் இரணைமடு நீர்ப்பாசன பொறியியலாளர் மற்றும் பிரதிநீர்பாசன பொறியியலாளர், பிரதி மாகாண விவசாய பணிப்பாளர், விவசாயிகள் மற்றும் துறைசார்ந்த திணைக்களங்களின் தலைவர்கள் என பலர் கலந்து கொண்டனர். (நி-5-6-315-316)

# இராசிபலன்

08.03.2024
மாசி 25, வெள்ளிக்கிழமை
திரியோதசி முன்னிரவு 8.21 மணிவரை
திருவோணம் முற்பகல் 8.32 மணிவரை

சுபநேரம்-06.24-7.54 மணிவரை
இராகுகாலம் 10.54-12.24 மணிவரை
மகாசிவராத்திரி, பிரதோச விரதம்

சந்திராஷ்டமம்: திருவாதிரை

வளவன்


மேஷம்

வீட்டுத் தேவைகள் எளிதில் பூர்த்தியாகும், யோசிக்காமல் செய்த காரியங்களில் கூட முன்னேற்றம் காண்பீர்கள், வழிபாட்டில் ஆர்வம் காட்டுவீர்கள்.


கடகம்

நீண்ட நாளைய நண்பர் ஒருவரின் சந்திப்பு இடம் பெறலாம், பயணங்களால் பலனுண்டு, வீட்டு உபயோகப் பொருட்களை வாங்கி மகிழும் வாய்ப்பு உண்டு, போசன சுகமுண்டு.


துலாம்

செல்லும் இடங்களில் சிந்தனை ஆற்றலால் சிறப்படைவீர்கள், காலை நேரத்திலே கலகலப்பான செய்திகள் வந்து சேரலாம், வாகன சுகமுண்டு, போசன சுகமுண்டு.


மகரம்

ஆற்றல் மிக்கவர்களின் ஒத்துழைப்பு கிடைக்கும், பொது நலனில் அக்கறை கூடும், தொட்ட காரியங்களில் வெற்றி பெற அம்பிகையை வழிபட வேண்டிய நாள்


ரிஷபம்

அரைகுறையாக இருந்த பணிகளை மீதியும் தொடர்வீர்கள், ஆன்றோர்களின் சந்திப்பு இடம்பெறலாம், குடும்பத்தில் நிலவிய மனஸ்தாபங்கள் அகலும்


சிம்மம்

சிக்கனத்தை கடைப்பிடிக்கும் எண்ணம் உருவாகும், தொழில் வளர்ச்சி கருதி முக்கிய முயற்சி எடுப்பீர்கள், சுவாரஸ்யம் தரும் சம்பவங்கள் இடம்பெறலாம்.


விருச்சிகம்

சேமிப்பை உயர்த்துவதற்கான வழியை கண்டு கொள்வீர்கள், பொது வாழ்வில் புகழ் கூடும், விரதம் வழிபாடுகளில் நம்பிக்கை கூடும், காரிய அனுகூலமுண்டு.


கும்பம்

சாப்பிடக்கூட நேரமில்லாமல் சில வேலைகளைச் செய்வீர்கள், பயணங்களால் பிரபலமானவர்களின் சந்திப்பு இடம்பெறலாம், சுப விரயங்கள் மேலோங்கும் நாள்.


மிதுனம்

உறவினர் விவகாரங்களில் தலையிடுவதை தவிர்த்து கொள்ளுங்கள், வரவை காட்டிலும் விரயங்கள் மேலோங்கும் நாள், கவலைகள் தீர கணபதியை வழிபட வேண்டிய நாள்.


கன்னி

நீண்ட நாட்கள் தள்ளிப்போட்டு வந்த காரியமொன்றை செய்து முடிப்பீர்கள், மன நிறைவு கூடும் நாள், வழிபாட்டில் மகத்துவம் காணும் நாள்.


தனுசு

செய்தொழில் மேன்மையுண்டு, எதிர்பாராத தனவரவுகள் வந்து சேரலாம், குடும்பத்தில் சுபநிகழ்வுகள் இடம்பெறும் வாய்ப்புண்டு, எடுத்த காரியங்களில் அதிக பிரயாசை கூடும்.


மீனம்

நீண்ட நாளைய விருப்பங்கள் நிறைவேறும் வாய்ப்புண்டு அதிஷ்ட வாய்ப்புக்கள் உங்களை தேடி வரலாம், பொருளாதார நிலையில் முன்னேற்றம் காணும் நாள்.

Digitized by Noolaham Foundation.

ஓர் சுடரை அணைக்காமலே ஆயிரம் தீபங்கள் ஏற்றலாம்.

# பாஷையூரில் மாநகரசபையின் நடமாடும் சேவை

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாநகர சபையின் வரியிருப்பாளர்களின் நன்மை கருதி, நாளை மறு தினம் ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணி முதல் மாலை 3 மணி வரை நட மாடும் சேவை பாஷையூர் புனித அந்தோனியார் ஆலய பொது நோக்கு மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

வட்டாரம் 19 மற்றும் 20 ஆம் வட்டாரங்களிற்கான ஆதனவரி அறிவித்தல்கள் விநியோகித்தல், பெயர்மாற்ற விண்ணப்பப் படிவம் வழ ங்கல், துவிச்சக்கர வண்டி உரிமம் வழங்கல் போன்ற சேவைகளைப் பெற்றுக் கொள்வதுடன் அனைத்து வட்டாரங்களினதும் இதுவரை காலமும் செலுத்த வேண்டிய ஆதன வரி நிலுவைகள் மற்றும் நடப்பாண்டு ஆதன வரி,தண்ணீர்க் கட்டணம் மற்றும் வியாபார வரி விருத்தி போன்ற வற்றை செலுத்திக் கொள்ள முடியும் என யாழ். மாநகர சபையின் ஆணையாளர் அறிவித்துள்ளார். (நி-5-6)

# சிவராத்திரி விழாக்கள்

(யாழ்ப்பாணம்)

வட்டுக்கோட்டை தெக்கணப்பாய் கண்ணகாம்பிகா சமேத கண்ணலிங்கேஸ்வரர் ஆலய மஹா சிவராத்திரி உற்சவம் இன்று மாலை 4.30 மணிக்கு பிரதோஷ பூசையை தொடர்ந்து நான்கு சாமமும் அபிஷேக ஆராதனைகள் இடம்பெற்று நாளை அதிகாலை 4 மணிக்கு திருவூஞ்சல் உற்சவத்தை தொடர்ந்து 5.30 மணியளவில் எம்பெருமான் ஆலய பித்தர் கேணிக்கு எழுந்தருளி தீர்த்த உற்சவம் இடம்பெறவுள்ளது. (நி-5-6)

• • • • • • • • • • • • • • •

(யாழ்ப்பாணம்)

அரியாலை வெட்டுக்குளம் ஸ்ரீ புவனேஸ்வரி அம்பாள் ஆலயத்தில் இன்று மகா சிவராத்திரி தினத்தை முன்னிட்டு மாலை 6.30 மணிக்கு அபிஷேகத்தை தொடர்ந்து 4 சாமப் பூசைகள் நடைபெறவுள்ளன.

அதனைத் தொடர்ந்து இரவு 7.30 மணிக்கு அறிநெறி மாணவர்களின் கலை நிகழ்வுகளும் இடம்பெறும். (நி-5-6)

# திருக்கேதீச்சரத்திற்கு விஷேட பேருந்து சேவை

(யாழ்ப்பாணம்)

மகா சிவராத்திரி தினத்தை முன்னிட்டு பேருந்து பருத்தித்துறையிலிருந்து திருக்கேதீச்சரத்திற்கு சிறப்பு சேவைகள் முன்னெடுக்கப்படவுள்ளன.

இலங்கை போக்குவரத்து சபையினால் குறித்த சேவை முன்னெடுக்கபடவுள்ளது.

இதன்படி பருத்தித்துறை பேருந்து தரிப்பிடத்தில் இருந்து அதிகாலை 5ணி , காலை 9 மணி, நண்பகல் 12 மணி பிற்பகல் 3 மணி மற்றும் மாலை 6 மணிக்கு குறித்த சேவைகள் இடம்பெறும் என பருத்தித்துறை சாலை அறிவித்துள்ளது. (நி-5-6)



ஸ்ரீ லங்கா முஸ்லிம் மீடியா போரம் ஏற்பாட்டில் கொழும்பு-07 இல் அமைந்துள்ள லக்ஷ்மன் கதிர்காமர் மண்டபத்தில் "இஸ்லாமிய சமூகத்திலும் மேற்கத்திய சமூகத்திலும் பெண்களும் குடும்பமும்" எனும் தொனிப் பொருளில் நடைபெற்ற மகளிர் தின சிறப்பு நிகழ்வில் பிரதம அதிதி முன்னாள் அமைச்சர் பேரியல் அஷ்ரப் அவர்கள் பொன்னாடை அணிந்து காணப்படுகிறார். அருகில் ஸ்ரீலங்கா முஸ்லிம் மீடியா போரம் தலைவர் அல்ஹாஜ் என்.எம்.அமீன், இலங்கை வானொலியின் சிரேஷ்ட அறிவிப்பாளரும் ஸ்ரீ லங்கா முஸ்லிம் மீடியா போரத்தின் முன்னாள் தலைவியுமான புர்கான் பி.இப்திகார்,கலாபூஷணம் யாழ் பரீட் இக்பால் ஆகியோரையும் படத்தில் காணலாம்.

## மணிவிழா காணும் நாயகி



திருமதி.ஜெயவதனா கங்காதரன்

(பயிற்றப்பட்ட விஞ்ஞான ஆசிரியர் SLTS-I)

சேவை விபரம்

ஆசிரியர் - யா/இணுவில் மத்திய கல்லூரி
28.11.1989 -02.02.1993

ஆசிரியர் பயிற்சி -யா/பலாலி ஆசிரியர் கலாசாலை
02.02.1993 -31.12.1994

ஆசிரியர் -யா/கந்தரோடை தமிழ் கந்தையா வித்
01.02.1995 -30.06.1995

ஆசிரியர் -யா/இணுவில் மத்திய கல்லூரி
01.07.1995 -30.06.2004

ஆசிரியர் -யா/மயிலணி மகாவித்தியாலயம்
01.07.2004 -31.12.2004

ஆசிரியர் -யா/இணுவில் இந்துக்கல்லூரி
01.01.2005 -16.01.2014

ஆசிரியர் -யா/உடுவில் மான்ஸ் மகாவித்தியாலயம்
17.01.2014 -11.07.2019

பதிலதிபர் ஆசிரியர் -யா/உடுவில் மான்ஸ் மகாவித்தியாலயம்
12.07.2019 -28.09.2019

பிரதி அதிபர் -யா/உடுவில் மான்ஸ் மகாவித்தியாலயம்
29.09.2019 -07.03.2024

திருமதி.ஜெயவதனா கங்காதரன் அவர்கள் முப்பத்து நான்கு வருடங்களுக்கு மேல் ஆசிரியப் பணியாற்றி, எமது பாடசாலையில் பத்து வருடங்கள் விஞ்ஞானத்தைத் திறம்பட போதித்தும் பாடசாலைத் தோட்டம் திறம்படத் திகழ்த்து வெற்றி பெற உழைத்தும் நிர்வாகக் கடமைகளுக்கு ஒத்துழைப்பு வழங்கியும் முன்னேற்றத்திற்கு உழைத்திட்டமைக்கு பாராட்டுக்களையும் நன்றிகளையும் தெரிவிப்பதுடன், அவரது ஓய்வுக் காலம் நலமும் வளமும் பெற்று சிறப்போடு வாழ அகமகிழ்ந்து வாழ்த்துகிறோம்.

வாழ்த்துவோர்- ஆசிரியர் நலன்புரிக்கழகம்
யா/உடுவில் மான்ஸ் மகாவித்தியாலயம்.

## மணிவிழா வாழ்த்து

திருமதி.
சாந்தாதேவி
இராதாக்கிருஷ்ணன்
SLTS-I

பகுதித் தலைவர் ஆரம்பக்கல்வி
அகவை அறுபதில் ஆசிரியப் பணியில்
இருந்து இன்று ஓய்வு பெறும்
எமது சக ஆசிரியரின்
ஓய்வுக் காலம்
சீரும் சிறப்பும் மிக்கதாக
அமைய மனதார
வாழ்த்துகின்றோம்.



ஆசிரியர் நலன் புரிக்கழகம்
யா/சன்மார்க்க மகா வித்தியாலயம்.

(19375)

# படவிளக்க கண்காட்சி

(யாழ்ப்பாணம்)

யாழ்.பிரம்ம குமாரிகள் இராஜயோக நிலையத்தினால் சிவராத்திரியை முன்னிட்டு இன்று காலை 10 மணிக்கு சாவகச்சேரி வாரிவனேஸ்வரர் சிவன் ஆலய வளாகத்தில் படவிளக்க கண்காட்சி இடம்பெற வுள்ளது. இன்று ஆரம்பமாகும் இந் நிகழ்வு நாளை காலை 10 மணிவரை இடம் பெறவுள்ளது. (நி-5-6)

# வைக்கோல் பட்டைக்கு தீ வைத்த விஷமிகள்

(கரணவாய்)

கரவெட்டி மத்தியில் வீடு ஒன்றில் குவிக்கப் பட்டிருந்த வைக் கோல் பட்டரைக்கு இனந்தெரியாத நபர்களால் தீ வைத்து எரிக்கப்பட்டதாக நெல் லியடிப் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

கரணவாய் கிழக்கைச் சேர்ந்த ஒருவர் வயல் அறுவடை செய்த பின்னர் அதன் வைக்கோலை தாயார் வீட்டில் குவித்து வைத்துள்ளார். இந்நிலையில் கடந்த செவ்வாய்க் கிழமை இரவு இனந் தெரியாத நபர்களால் வைக் கோல் குவியலுக்கு தீ வைத்து எரித்தமையால் 60.000 ரூபா பெறுமதியான வைக்கோல் தீயில் எரிந்து நாசமாகியுள்ளது. (நி-5-6-60)


# கல்யாணமாலை

## சர்வதேச திருமண சேவை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
| --- | --- |
| பிறப்பு: 1971 இந்து<br>நட்சத்திரம்:அச்சுவினி<br>உயரம்: 5'11"<br>தகைமை/தொழில்: O/L,(France)<br>விவாகரத்தானவர்<br>எதிர்பார்ப்பு:விவாகரத்தானவர்கள்.<br>பிள்ளைகளற்றவர்.<br>தொ.இ: B/14070 | பிறப்பு-1996-இந்து<br>நட்சத்திரம் : அவிட்டம்<br>கி.பா-25 ¼<br>சூரிசெவ் 5 இல்<br>உயரம் : 5'11"<br>தகைமை/தொழில்:குடிசார் பொறியியல்(TO)<br>எதிர்பார்ப்பு:Engineer,Doctor,Accountant,<br>உயர்பதவி<br>தொ.இ: G/14108 |
| பிறப்பு: 1992 இந்து<br>நட்சத்திரம்: ஆயிலியம்<br>கி.பா: 51<br>உயரம்: 5'6"<br>தகைமை/தொழில்: Bsc(Hons),Own Business.<br>எதிர்பார்ப்பு: A/L படித்த பெண். பட்டதாரி<br>தொ.இ: B/14071 | பிறப்பு-1995-இந்து<br>நட்சத்திரம்: சித்திரை<br>சூரி செவ் 2 இல்<br>உயரம் : 153 CM<br>தகைமை/தொழில்:college (Teacher)<br>எதிர்பார்ப்பு: அரச/தனியார் உத்தியோகம்<br>தொ.இ: G/14111 |
| பிறப்பு: 1982 இந்து<br>நட்சத்திரம் : சித்திரை<br>கி.பா: 18 3/4<br>உயரம்: 5'4"<br>தகைமை/தொழில்: Bsc(Electrical Engineering),Electronic Engineer(pvt)<br>எதிர்பார்ப்பு : பட்டதாரி. Doctor,Banker<br>தொ.இ: B/14072 | பிறப்பு -1990- இந்து<br>நட்சத்திரம்:திருவோணம்<br>கி.பா:69<br>உயரம் :5'6"<br>தகைமை/தொழில்: Bsc IT, Msc,Software Engineer<br>எதிர்பார்ப்பு: பொருத்தமான தொழில்சார் தகமையுடையோர்<br>தொ.இ: G/14113 |
| பிறப்பு: 1987 இந்து<br>நட்சத்திரம் : சித்திரை<br>கி.பா: 53<br>உயரம்: 5'7"<br>தகைமை/ தொழில்: A/L (Business)<br>எதிர்பார்ப்பு: படித்த குணமான பெண்<br>தொ.இ: B/14073 | பிறப்பு -1995-இந்து<br>நட்சத்திரம் -பூரட்டாதி<br>உயரம் :150CM<br>தகைமை/தொழில்:A/L விவாகரத்தானவர்<br>எதிர்பார்ப்பு:வெளிநாடு .விவாகரத்தானவர்<br>தொ.இ: G/14117 |

கல்யாணமாலை
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக் கட்டணம் 4000 ரூபாவுடன் தொலைத்தொடர்பு சேவைக் கட்டணமாக ரூபா 500 அறவிடப்படும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாரதம்

## 'AI' தொழில் நுட்பம் மூலம் 'ஜரிஸ்' ஆசிரியை ரோபோ



(டில்லி)

இந்தியாவில் AI தொழில் நுட்பத்தை பயன்படுத்தி "ஜரிஸ்" என்ற பெயரில் ரோபோ ஆசிரியரை உருவாக்கி கல்வி துறையில் புதிய சாதனையை நிகழ்த்தியுள்ளது.

கேரளாவின் திருவனந்தபுரத்தில் உள்ள கேடிசிடி மேல்நிலைப்பள்ளி, 2021 நிதி ஆயோக் புத்தாக்க திட்டத்தின்கீழ் அடல் டிங்கரிங் சோதனை கூடத்தை பள்ளி வளாகத்தில் நிறுவியது. மேக்கர்லேப்ஸ் எஜுடெக் எனும் தொழில்நுட்பக் கல்வி நிறுவனத்துடன் இணைந்து செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பத் திறனை பயன்படுத்தி 'ஜரிஸ்' என்ற பெயரில் மனித இயல்பு கொண்ட ரோபோ ஆசிரியரை இப்பள்ளி வடிவமைத்துள்ளது.


அச்சு அசலாக பெண் உருவில் காட்சியளிக்கும் 'ஜரிஸ்' ரோபோ பன்மொழி புலமை கொண்டது. பல்வேறு பாடங்களிலிருந்து கேள்விகள் எழுப்பினாலும் சரளமாக பேசியபடி பதில் அளிக்கும்.

இதன் கீழ் பகுதியில் சக்கரங்கள் பொருத்தப்பட்டிருப்பதால் எளிதில் இடம் விட்டு இடம் நகர்ந்து செல்லும்.

இதுகுறித்து மேக்கர் லேப்ஸ் நிறுவனம் இன்ஸ்டாகிராம் பக்கத்தில் வெளியிட்ட காணொலி பதிவில், "ஜரிஸ்" எனும் AI ஆசிரியர் ரோபோவை அறிமுகம் செய்வதில் மேக்கர்லேப்ஸ் எஜுடெக் பெருமை கொள்கிறது. இதன் மூலம் கற்றல் துறையில் புதிய போக்கை உண்டாக்கி புத்தாக்கத்தின் முன்னோடியாகத் திகழ்கிறோம்" என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

தனிப்பட்ட முறையில் கற்று கொள்ளவும், பலவிதமான கற்றல்-கற்பிக்கும் முறைகளை பின்பற்றவும், மாணவர்கள் மிகுந்த ஆர்வமுடன் படிக்கவும் ஜரிஸ் ரோபோ கைகொடுக்கும். இந்த கண்டுபிடிப்பு கேரள கல்வி பரப்பில் புதியவளர்ச்சிக்கு வழிவகுக்கும் என்று கல்வியாளர்கள் தெரிவிக்கின்றனர். (நி-5-6)

## ஆற்றுக்குள் கவிழ்ந்த பேருந்து எழுவர் பலி, 30 பேர் காயம்



(காத்மண்டு)

நேபாளத்தில் பேருந்து ஒன்று சாரதியின் கட்டுப்பாட்டை இழந்து ஆற்றில் கவிழ்ந்ததில் 7 பேர் உயிரிழந்துள்ளதுடன் 30 பேர் காயமடைந்துள்ளனர்.

நேபாளத்தின் தலைநகர் காத்மண்டுவை நோக்கி நேற்று முன்தினம் 45 பயணிகளுடன் சென்று கொண்டிருந்த பேருந்து ஒன்று சாரதியின் கட்டுப்பாட்டை மீறி ஆற்றில் கவிழ்ந்து விபத்துக்குள்ளாகியுள்ளது.

இந்த நிலையில், ஆற்றில் பேருந்து கவிழ்ந்ததில் பயணிகள் பலரும் நீருக்குள் மூழ்கினர்.

இதில், 7 பேர் உயிரிழந்துள்ளதுடன் 30 பேர் காயமடைந்துள்ளனர்.

இது தொடர்பில் மாவட்ட பொலிஸ் உயர் அதிகாரி கூறும்போது, இந்த விபத்திற்கான காரணம் பற்றி விசாரித்து வருகிறோம் என கூறினார். (நி-5-6)

# சூடு பிடிக்கும் அமெரி
# பைடனை விவாதத்திற்



(வோஷிங்டன்)

**அமெரிக்காவில் நவம்பர் தேர்தலுக்கு முன்னதாக அ பைடனை நேரலை விவாத முன்னாள் அமெரிக்க ஜனா அழைப்பு விடுத்துள்ளார்.**

அமெரிக்க ஜனநாயகக் கட்சியின் தலைவருடன் எந்தவொரு நேரத்திலும் நேரடி விவாதத்தில் பங்கேற்க தாம் தயாராக உள்ளதாகவும் டொனால்ட் ட்ரம்ப் மேலும் தெரிவித்துள்ளார்.

எவ்வாறாயினும் நவம்பர் மாதம் நடைபெறவுள்ள தேர்தலுக்கு முன்னதாக நேரடி விவாதங்களில் பங்கேற்பது தொடர்பில் அமெரிக்க ஜனாதிபதி ஜோபைடன் எதுவித கருத்தினையும் வெளியிடவில்லை என சர்வதேச ஊடகங்கள் தெரிவித்துள்ளன.

இந்த நிலையில் அமெரிக்க குடியரசுக்கட்சியின் வேட்பாளர் போட்டியில் இருந்து இந்திய வம்சாவளியை சேர்ந்த நிக்கி

## அமெரிக்க ஜனாதிபதி தேர்தல் போட்டியிலிருந்து விலகினார் நிக்கிஹேலி



(வோஷிங்டன்)

அமெரிக்க ஜனாதிபதி தேர்தலுக்கான குடியரசுக் கட்சி வேட்பாளருக்கான போட்டியிலிருந்து நிக்கி ஹேலி விலகியுள்ளார்.

இது தொடர்பிலான அறிவிப்பை தென் கரோலினா மாநிலத்தின் தலைநகர் சார்ள்ஸ்டனில் நேற்று வெளியிட்டுள்ளார்.

இந்நிலையில், குடியரசுக் கட்சி வேட்பாளராக தனியொரு வேட்பாளராக முன்னாள் ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் போட்டியாளராக தெரிவிக்கப்படுகிறது.

மேலும், இதுவரை நடைபெற்ற குடியரசுக் கட்சியின் உட்கட்சித் தேர்தல்களில் வோஷிங்டன் டி.சி மற்றும் வேர்மண்ட் மாநிலத்தில் மாத்திரமே நிக்கிஹேலி வெற்றியீட்டிய நிலையில் அவர் இப்போட்டியிலிருந்து விலகுவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.ட்ரம்ப் மற்றும் ஜோபைடன் ஆகியோரின் தொடர்ச்சியான வெற்றிகளுக்குப் பிறகு தங்கள் கட்சிகளுக்கு அதிகாரப்பூர்வமற்ற கட்டளையை எடுத்துக்கொள்வதன் மூலம், தனது பிரச்சாரத்தை முடித்துக்கொண்ட ஹேலியின் முடிவு பொதுத் தேர்தலைத் திறம்பட ஆரம்பித்துள்ளதாக அமெரிக்க அரசியல் ஆய்வாளர்கள் கருத்து வெளியிட்டுள்ளனர்.

"அமெரிக்கர்கள் தங்கள் குரல்களை வெளிப்படுத்த வேண்டும் என்று நான் விரும்புகிறேன். நான் அதைச் செய்தேன்.

எனக்கு எந்த வருத்தமும் இல்லை. நான் இனிவேட்பாளராக இருக்க மாட்டேன் என்றாலும், நான் நம்பும் விடயங்களுக்கு எனது குரலைப் பயன்படுத்துவதை நிறுத்த மாட்டேன்." என நிக்கி ஹேலி வெளியிட்ட அறிவிப்பில் கூறியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (நி-5-6)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மெரிக்க தேர்தல் களம் திற்கு அழைத்த ட்ரம்ப்



**ம்பர் மாதம் நடைபெறவுள்ள க அமெரிக்க ஜனாதிபதி ஜோ விவாதம் ஒன்றிற்கு வருமாறு ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் ார்.**


லை கள் ரிக்க ளர் திய க்கி

ஹேலி வெளியேறியதை தொடர்ந்து டொனால்ட் ட்ரம்ப் குறித்த அறிவிப்பினை வெளியிட்டுள்ளார்.

டொனால்ட் ட்ரம்ப் அமெரிக்க ஜனாதிபதியாக பதவி வகித்த போது ஐக்கிய நாடுகள் சபைக்கான அமெரிக்க தூதராக நிக்கி ஹேலி பதவிவகித்தமை குறிப்பிடத்தக்கது.

இந்த நிலையில் அமெரிக்காவில் நவம்பர் மாதம் இடம் பெறவுள்ள ஜனாதிபதி தேர்தலில் ஜனநாயகக்கட்சி வேட்பாளர் ஜோபைடனுக்கு எதிராக குடியரசுகட்சியின் சார்பில் களமிறங்கவுள்ளதாக டொனால்ட் ட்ரம்ப் அறிவித்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (நி-5-6)

## அமெரிக்காவில் விமான விபத்து 5 கனேடியர்கள் பலி



(வோஷிங்டன்)

அமெரிக்காவின் நாஸ்வில் பகுதியில் இடம்பெற்ற விமான விபத்தில் ஐந்து கனேடியர்கள் உயிரிழந்துள்ளனர்.

ஒன்றாரியோவிலிருந்து பயணம் செய்த விமானமே இவ்வாறு விபத்துக்குள்ளாகியுள்ளது. விமானத்தின் விமானி, சக பயணி மற்றும் மூன்று சிறுவர்கள் இந்த சம்பவத்தில் உயிரிழந்துள்ளனர்.

இந்த சம்பவம் தொடர்பில் விசாரணைகள் முன்னெடுக்கப்பட உள்ளதாக கனேடிய வெளிவிவகார அமைச்சு தெரிவித்துள்ளது.

"தொலை தூரத்தில் இருக்கின்றேன். என்னால் தரையிறக்க முடியாது" என விமானி இறுதியாக கூறியுள்ளார். விமானம் கட்டுப்பாட்டை இழந்து தரையில் வீழ்ந்து நொருங்கி தீப்பற்றிக் கொண்டதாகத் தெரிவிக்க ப்படுகின்றது. (நி-5-6)

## இந்தியாவில் நீருக்கு அடியிலான மெட்ரோ தொடருந்து சேவை

### ஆரம்பித்து வைத்த பிரதமர் மோடி



(டில்லி)

இந்தியாவின் நீருக்கு அடியிலான முதலாவது மெட்ரோ தொடருந்து சேவையை பிரதமர் நரேந்திர மோடி நேற்று முன்தினம் ஆரம்பித்து வைத்துள்ளார்.

கொல்கத்தாவின் கிழக்கு - மேற்கு மெட்ரோ தொடருந்து மார்க்கத்தில் ஹவுரா மைதான் - எஸ்பிளனேட் ஆகிய நகரங்களுக்கு இடையே நீருக்கு அடியில் இந்த தொடருந்து சேவை முன்னெடுக்கப்படவுள்ளது.

குறிப்பாக நீருக்கடியில் மெட்ரோ ஆறு நிலையங்களைக் கொண்டுள்ளது, அவற்றில் மூன்று நிலத்தடியில் உள்ளன.

இந்த சேவையானது 4.8 கிலோமீற்றர் தூரம் கொண்ட இந்த தொடருந்து மார்க்கத்தில் ஹூக்ளி என்ற ஆற்றை கடக்க தரையிலிருந்து 32 மீற்றர் ஆழத்தில் 520 மீற்றர் நீளத்துக்கு இந்த மெட்ரோ தொடருந்து மார்க்கத்தில் சுரங்கம் அமைக்கப்பட்டுள்ளது.

மெட்ரோ 520 மீ ஆற்றை வெறும் 45 வினாடிகளில் கடந்து செல்கிறது. இது விரைவான மற்றும் திறமையான போக்குவரத்து முறையை உறுதியளிக்கிறது.

இதற்காக 4,965 கோடி இந்திய ரூபாய் செலவிடப்பட்டுள்ளதாக இந்திய ஊடகங்கள் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி-5-6)

## ஜனாதிபதி தேர்தல் பிரசாரங்களுக்கு நிதியுதவி வழங்கப் போவதில்லை

### எலான் மஸ்க்



(வோஷிங்டன்)

அமெரிக்க ஜனாதிபதி தேர்தலில் ஜோபைடன் மற்றும் முன்னாள் ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் ஆகிய இருவருக்கும் நிதி உதவிகளை வழங்கப் போவதில்லை என எக்ஸ் நிறுவனத்தின் உரிமையாளர் எலான் மஸ்க் தெரிவித்துள்ளார்.

தேர்தல் பிரச்சார நடவடிக்கைகளுக்கான நிதியை தான் வழங்கவுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ள பின்னணியிலேயே, அவர் அதனை நிராகரிக்கும் வகையில் இந்த அறிவிப்பை தெரிவித்துள்ளார்.

அமெரிக்காவில் எதிர்வரும் நவம்பர் மாதம் ஜனாதிபதி தேர்தல் நடைபெறவுள்ளது.

இதில் போட்டியிட உள்ள தற்போதைய ஜனாதிபதி ஜோ பைடனை எதிர்த்து முன்னாள் ஜனாதிபதி டொனால்ட் டிரம்ப் களம் இறங்குகிறார். இந்த நிலையில், தனது தேர்தல் பிரச்சாரங்களுக்கு நிதி தேவைப்படுவதால் பல முன்னணி தொழிலதிபர்களை சந்தித்து டொனால்ட் ட்ரம்ப் நிதியுதவி கோரி வருகிறார்.

இதற்கமைய, உலகின் முன்னணி கோடீஸ்வரர்களில் ஒருவரும் அமெரிக்க தொழிலதிபருமான எலான் மஸ்கை டொனால்ட் ட்ரம்ப் சந்தித்து பிரசாரங்களுக்கு நிதி கோரியதாக தகவல்கள் வெளியாகி உள்ளன.

இதையடுத்து, குறித்த செய்திகளை அவர் நிராகரித்துள்ளதாக சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

இதேவேளை, எலான் மஸ்க், ட்ரம்பை ஆதரிக்கும் பட்சத்தில், பைடனின் வெற்றி வாய்ப்புகள் பெருமளவு குறையக்கூடும் என அரசியல் விமர்சகர்கள் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி-5-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெண்களுக்கான வலுவூட்டல்

(நேற்றைய தொடர்ச்சி...)



பேராசிரியர் சி.சிவேசன்
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்,

மாறாக பெண்களுக்குத் தங்களுடைய பெறுமதியினை அதாவது சமூகத்தில் ஓர் குடும்பத்தில் பெண்களின் வகிபாகங்கள் என்ன, எவை என்பதைத் தெளிவுபடுத்துகின்ற விழிப்புணர்வும் உள ஆற்றுப்படுத்தலும் மிகத் தேவைப்பாடு உடையதாகின்றது.

ஏனெனில் ஓர் குடும்பத்தில் ஒரு பெண்ணானவள் தன்னைத்தான் சார்ந்தவர்களின் மனதில், அதாவது குடும்ப உறுப்பினர்களின் மனதில் தன்னை நிலைப்படுத்திக் கொள்வதற்கு அனுதாப ரீதியிலான அணுகு முறையினையே கடைப்பிடிக்கின்றாள்.

இங்கு பெண் தனது வலுவினை உணர மறுக்கின்றாள். தமிழ்ப் பெண்கள் சங்க காலத்திலேயே குடும்பம், சமூகம், வணிகம் என்கின்ற கட்டமைப்புகளில் ஆண்களை விட மேலானவர்களகாவும் முதன்மையானவர்களாவும் காணப்பட்டனர். ஆகவே பெண் தம்மை உளவியல் ரீதியாக உணர் தல் மிக முக்கியமாகும். அதாவது பெண், தன் குறித்த மனோபாவத்தினை



உலக மகளிர் தினம்

**சர்வதேச மகளிர் தினத்தை முன்னிட்டு இக்கட்டுரை பிரசுரமாகிறது.**

மாற்றிக் கொள்ளல் அவசியப்பாடுடையதாகின்றது.

பெண்கள் பொருளாதார ரீதியாக அதாவது ஆண்களுக்கு சரிநிகர் என்கின்ற சித்தாந்த அடிப்படையில் தம்மை வளர்த்துக்கொள்ள வேண்டும். குறிப்பாக இலங்கையில் நீண்ட கொடிய உள்நாட்டு யுத்தத்தினால் அங்கங்களை இழந்தும் அங்கத்தவர்களை இழந்தும் வாழ்கின்ற பெண்களும் பெண்களையே தலைமைத்துவமாக கொண்ட குடும்பங்களும் கொடிய வறுமையில் சிக்குண்டு தவிக்கின்ற வேளையில் அவர்களுக்குப் பொருத்தப்பாடுடைய வேலை வாய்ப்புகளை வழங்குவதன் மூலமாக அவர்களுடைய வாழ்வாதாரத்தில் மாற்றத்தை ஏற்படுத்தி பொருளாதார ரீதியாக வலுவடையச் செய்ய முடியும்.

பெண்களுக்கான சமூக பாதுகாப்பினை பலப்படுத்த வேண்டும். அதாவது பெண்களின் சமூக மூலதனத்தை அதிகரித்துக் கொள்ளுதல் வேண்டும். அதற்காக தேவையான திறன் அபிவிருத்திகளை வழங்குதல் அவசியமானதாகும். பெண் கல்வியினை வளப்படுத்திக் கொள்ள வேண்டும்.

பெண்களுக்கு எதிரான பாலியல் அடிப்படையிலான வன் முறைகள் பற்றி விழிப்புணர்வினை ஏற்படுத்திக்கொள்ள வேண்டும். பெண்களை அரசியலிலும் நிர்வாகத்திலும் இணைப்பதன் மூலமாக மட்டும் பாலின சமத்துவத்தை ஏற்படுத்திக்கொள்ள முடியாது. மாறாக அரசியலிலும் நிர்வாகத்திலும் தீர்மானம் எடுப்பவர்களாக பெண்கள் முன்னிலைப்படுத்தப்பட வேண்டும். மேலும் பெண்கள் பாடசாலைகள் மட்டத்திலிருந்து பெண்களுக்கான உரிமைகள், பொறுப்புக்கள் குறித்து சட்டம் பேசுவதையும் அல்லது சொல்லுவதையும் மதம் கூறும் அறக் கருத்துகளையும் விழுமியங்களையும் பயிற்சிப் பட்டறைகள், கருத்தரங்குகள் வழங்குவதன் மூலம் பெண்ணானவள் தன்னை பாரதி கண்ட புதுமைப் பெண்ணாக மாற்றிக்கொள்ள வழிவகை செய்து கொள்ள முடியும்.

**முடிவுரை**

அணுவைத் துளைக்கும் வல்லமை கொண்டு பாரினில் பாவையர் வாழ்ந்தாலும் இன்றும் உலகின் பல பாகங்களில் பெண்கள் தீண்டப்படாதவர்களாகவும் உரிமைகள் மறுக்கப்பட்டவர்களாகவும் சமூகத்திற்குப் போதை தரும் பேதைகளாகவும் கவர்ச்சிகரமான தூண்டல்களை ஏற்படுத்த வல்ல கவர்ச்சிப்பொருளாகவும் நோக்கப்படுகிறார்கள். சமூகத்தின் பார்வையானது பெண் குறித்தும் பெண்மை குறித்தும் மாறுதலுக்குட்பட வேண்டும் என்பது நிஜம். சமூகத்தில் பெண்கள் உரிமைகளோடு ஆண்களைப் போல் சம அந்தஸ்துடன் வாழ வேண்டுமாயின் பெண்கள் பொருளாதார, கல்வி, சமூக மேம்பாடு, அரசியல் பங்கேற்பு போன்றவற்றில் தம்மை வலுப்படுத்துவதன் வாயிலாகவே அடைய முடியும். இவையனைத்திற்கும் மேலாக பெண்கள், சமூகத்தில், குடும்பத்தில் தம் வகிபாகம் குறித்தும் குடும்பத்தில் மற்றும் சமூகத்தில் தம்மை நிலைப்படுத்திக் கொள்கையில் உணர்வுப் பூர்வமான அணுகுமுறையினைப் பயன்படுத்தாது பகுத்தறிவு ரீதியான அணுகுமுறையினைப் பயன்படுத்திக்கொள்ள வேண்டும். அதாவது இன்றும் பெண்கள் தங்களுடைய தியாகங்களினையும் விட்டுக்கொடுப்புகளையும் தன் வாரிசுகளுக்கும் தன் சார்ந்தவர்களுக்கும் இயம்புவதன் ஊடாக தம்மை ஏனையவர்கள் மத்தியில் நிலைப்படுத்த முற்படுகின்றனர். இத்தகைய தவறான உணர்வுபூர்வமான அணுகுமுறையிலிருந்து நீங்கி தம் பெறுமதி உணர்ந்து, வலு உணர்ந்து சமூகத்தில் ஓர் அங்கத்தவர்களாக வாழ்ந்திட மகளிர்/பெண்கள் வலுவூட்டல் முக்கியமானதாக அமைகின்றது.

(முற்றும்)

# இன்று ஒரு தகவல் 58



தென்கச்சி கோ.சுவாமிநாதன்

## இதயமும் மூளையும்

1816 ஆம் ஆண்டிலே...

ஒரு நாள் ஒரு பிரெஞ்சு டொக்டர். ரேனதியோ பிலிலேநக் என்று ஒருத்தர். மருத்துவமனையில் இருந்து வீட்டுக்கு போய்க்கொண்டு இருந்தார். அப்படி போய்க் கொண்டு இருக்கும் வழியில் சில சின்ன பிள்ளைகள் விளையாடிக் கொண்டு இருந்தார்கள்.

எப்படி தெரியுமா?

ஒரு மரத்துண்டு இருந்தது. அதிலே ஒரு முனையிலே ஒரு பையன் தட்டிக் கொண்டு இருந்தான்!

அந்த மரத்துண்டிலே இன்னொரு முனையிலே காதை வைத்து இன்னொரு பையன் கேட்டுக்கொண்டு இருந்தான். மறுபடியும் இந்த பக்கத்தில் இருந்து தட்ட வேண்டியது. அதை அவன் அந்த பக்க த்தில் கேட்க வேண்டியது.

இதைப்பார்த்தார் அந்த டொக்டர். வீட்டுக்கு போய்க்கொண்டு இருந்தவர் மறுபடியும் ஆஸ்பத்திரிக்கு போனார்.

ஒரு பெரிய காகித துண்டை எடுத்து குழாய் மாதிரி சுருட்டினார். அதோட ஒரு முனையை நோயாளி நெஞ்சிலே வைத்தார். இன்னொரு முனையிலே தன்னுடைய காதை வைத்து கேட்டார்.

அந்த மனிதனுடைய இதயத்துடிப்பு அவருக்கு கேட்டது. அன்றைக்கு அப்படி ஆரம்பித்தது தான் இன்றைக்கு ஸ்டெதஸ்கோப்பாக மாறியது.

மனிதன் கருவில் உருவாகியதில் இருந்து கடைசி மூச்சு உள்ள வரைக்கும் அவன் உடம்பில் ஓய்வில்லாமல் வேலை செய்வது இரண்டு.

ஒன்று மூளை. இன்னொன்று இருதயம். அப்படிப்பட்ட இருதயத்தை கூட கொஞ்ச நேரத்திற்கு நிறுத்தி வைத்து விட்டு ஒரு சத்திரசிகிச்சை செய்து இருக்கிறார்கள் சில டொக்டர்கள்.

செத்து பிழைப்பது என்று சொல்கிறார்களே அது தான் நிஜமாகவே போய்விட்டது.

இப்போது ஒருவரை சாக வைத்து பிழைக்க வைத்து இருக்கிறார்கள். ஒரு சௌகரியத்திற்காகதான். ஒரு பெண் நோயாளிக்கு ரத்த சேதம் இல்லாமல் சத்திரசிகிச்சை செய்ய வேண்டி இருக்கு.

அரிசோனா என்ற இடத்தில் இது நடந்தது. டொக்டர்கள் என்ன செய்தார்கள் என்றால் அந்த நோயளியை ஒரு 40 நிமிடம் இறந்த நிலையிலே வைத்து இருந்தார்கள். அதன் பின்பு பிழைக்க வைத்து விட்டார்கள்!

இந்த இடைவெளி நேரத்தில் சத்திரசிகிச்சையை வெற்றிகரமாக செய்து முடித்தார்கள்.

முதலில் அந்த பெண்ணை கோமா என்கிற நிலைமைக்கு கொண்டு வந்து அவள் இதய ஓட்டத்தை நிறுத்தி வைத்து விட்டார்கள்.

44 பாகை சென்டிகிரேட் வெப்ப நிலையில் அவளது உடம்பை குளிர வைத்துவிட்டார்கள். அவள் உடம்பிலிருந்து இரத்தத்தை வடித்து எடுத்து விட்டு சத்திரசிகிச்சை செய்து விட்டு அதன் பின்பு அந்த பெண்ணை பழைய படி உயிர்ப்பித்து விட்டார்கள்.

அந்த பெண்ணுடைய பெயர் எதில் சென்ட் லாரன்ஸ். வயது 61

அந்த அம்மா ஒரு பத்து வார காலம் வைத்தியசாலையில் இருந்தார். அதன் பின்னர் வீட்டிற்கு வந்து விட்டார். பழையபடி வேலை எல்லாம் பார்க்க ஆரம்பித்து விட்டாராம். இது பெரிய சாதனை. ஏன் என்றால் இதயத்தை நிறுத்தி வைப்பது என்பது பெரிய சாதனை.

சில பேர் என்னுடைய இதயத்தை அவளிடம் ஒப்படைத்து விட்டேன் என்று சொல்கிறார்களே எதற்காக? அவளுக்காக உயிரையே கொடுக்க சித்தமாக இருக்கிறேன் என்று அர்த்தம்.

அப்படிப்பட்டவர்களை கூப்பிடும்போது என் இதயமே என்று அர்த்தம். என் கட்டை விரலே என்று கூப்பிடுவதில்லை.

இன்னொரு விடயம். இதயத்தை கொடுக்கிறேன் என்று சொல்பவர்கள் கூட மூளையை கொடுக்கிறேன் என்று சொல்லுவது இல்லை. ஏன் என்றால் மூளையை கொடுத்து விட்டேன் என்று சொன்னால் புத்தி கெட்டு போய் விட்டது என்று அர்த்தம். ஆனால் என்னுடைய நண்பன் ஒருத்தன் நான் என்னுடைய மூளை, இதயம் இரண்டையும் என்னுடைய மனைவியிடம் கொடுத்து விட்டேன் என்று சொன்னார். கல்யாணத்திற்கு முன்னாடி இருதயத்தை கொடுத்தேன். கல்யாணத்திற்கு பின் மூளையை கொடுத்து விட்டேன் என்று சொன்னார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிவராத்திரியில் நான்கு சாமத்திருமுழுக்கும் வழிபாடும், விழித்துச் சிவபதம் அடைந்த சிவ மகாபுராணத்தில் உள்ளது

உயிர்களுக்கு நன்மையைத் தருகின்ற சிவனது இரவென்று. மண்ணுயிர்கள் உய்யும் பொருட்டு உமா தேவியார் நான்கு சாமமும் சிவபூசை செய்த இரவாதலின் "நன்றேயருளும் சிவனிரா" என்றார் முன்னொரு கற்பத்தில் உலகம் முழுவதும் பிரளயம் மூடிய அந்த இராத்திரியில் மண்ணுயிர்கள் உய்யும் பொருட்ச் சிவ சக்தியாகிய உமாதேவியார் நான்கு சாமமுஞ் சிவபூசை செய்து புலரிக் காலத்தில் சிவபெருமானை நோக்கி தாம் வழிபட்ட இந்த இரவு சிவராத்திரியாக வேண்டும் எனவும், இந்த நாளில் விரதமிருந்து நான்கு சாமமும் பூசை செய்பவர்கள் வீடுபேறு வேண்டும் என வேண்டிக் கொள்ளச் சிவபெருமானும் அவ்வாறே வரங் கொடுத்த ருளினார் என்பது வரலாறு.

திருமாலும் பிரமனுந் தாமே பரம்பொருள் எனத் தனித்தனி செருக்குற்றுப் போரிட்ட காலத்து அவர்களது அறியாமையைப் போக்க உண்மையை உணர்த்தப் பரம் பொருளாகிய சிவன். அவர்களுக்கிடையில் நெருப்பு மலையாகத் தோன்றிய இரவு சிவராத்திரியாயிற்று என்ற வரலாறும் உண்டு. இன்றும் உண்ணாமுலை அண் ணாமலை "சிவனே, சிவனே" எனவும் ஓம் நமசிவாய என கிரிவலம் சிவ சிந்தனையுடன் வந்து பலர் நலம் அடைந்ததும், நாமும் எங்கிருந்தாலும் நினைக்கும் முத்தி தரும் ஒரே ஒரு அருள் மிகு ஆலயம் உண்ணாமலை அண்ணாமலை ஆகும்."ஓம் நமசிவாய"

இன்றைய மக்களில் பலர் பல கோணங்களாகச் சிவராத்திரி விழிப்பிருக்கின்றனர். சிவத்தோடு சிவ நாமத்தோடு. தொடர்பு இல்லாத நித்திரையை ஏமாற்றி இறைவனையும் ஏமாற்றி தன்னையும் ஏமாற்றி உலகத்தையும் ஏமாற்றி தொலைக்காட்சி பார்த்தல் போன்ற சகல நிகழ்ச்சிகள் மூலம் கண் விழித்தல் பெரும் கேடாகும்.

ஆகையால் நம் முன்னோர்காட்டிய வழியில் பக்தி சிரத்தையோடு அனுட்டிப்போருக்கு கோடானுகோடி பலன் உண்டென சிவ மகாபுராணத்தில் எம்பெருமான் கூறியுள்ளார். ஓம் நமசிவாய..

முசுகுந்தன் கந்தபுராண வரலாறு

கயிலையில் மலைச் சாரலில் உள்ளவில்வமரத்தின் கீழ் சிவபெருமானாரும் உமையம்மையும் எழுந்தருளியிருக்கும் போது. வில்வ மரத்தில் ஒரு குரங்கு விளையாட்டாக வில்வ இலைகளைப் பறித்துப் போட்டுக் கொண்டே இருந்தது.

அந்த நாள் மகா சிவராத்திரி ஆகும்.

"அறியாமல் வில்வ இலைகளை முடிமேல் போட, எம் பெருமானார் அருட்சனையாக ஏற்று, குரங்கின் மீது பார்வையைச் செலுத்த அக்குரங்கிற்கு சிவஞானம் உண்டாக உடனே கீழே இறங்கி வந்து அம்மை யப்பரை வணங்க, எம்பெருமான் நீ செய்த சிவராத் திரி பூசையால் இவ்வுலகையாளும் அரசனாகப் பிற ப்பாய் என அருள் செய்ய .குரங்கு அரசு போகத்தில் மூழ்காமல், இம் முகத்துடன் பிறக்கும் வரம் கேட்ட துடன், மேலும் மாறாத சிவபக்தியை யான் பெற வேண்டும் என வரம் கேட்டான்.

அவ்வாறு இக்குரங்கு தான் கருவூரில் சோழர் குலத்தில் குரங்கு முகத்துடன் பிறந்து முசுகுந்தன் எனப்பெயர் பெற்று கருவூரை தலைநகராக ஆட்சி செய்து மாறாத சிவ பக்தியுடன் திகழ்ந்தது. முடிவில் தனது மகனுக்கு முடி சூட்டி விட்டு கயிலை மலையின் கீழ் கடும் தவம் இருந்து இறுதியில் இறைவனடி சேர்ந்தார். இறுதியில் கணங்களின் தலைவர்களில் ஒருவனானான்.

இந்திர உலக அழைப்பில் போய் இந்திரனால் முடியாத சில அனர்த்தங்களை முடிவுக்கு கொண்டு வந்தார்.அதன் பின் பரிசாக இந்திரன் பூசித்து தியாகராசப் பெருமானை இந்திர உலகில் இருந்து இம் மண்ணுலகிற்கு கொண்டு வந்த வரலாறு கந்த புராணத்தில் உள்ளது. (இன்றும் திருவாரூர் ஆலயத்தில் விடங்கரை யார்க்கலாம்) முசுகுந்தன் என்றால் குரங்கு முகம் (முசு- குரங்கு)

ஒரு சிவராத்திரி நாள் அன்று திருமறைக்காட்டு சிவாலய விளக்கின் நெய்யை குடிக்க வேண்டும் என்று எண்ணி ஒரு எலி விளக்கின் மீது பட்டு அணையும் நிலையில் இருந்த விளக்கு திரி தூண்டப்பட்டு விளக்குச் சுடர் பிரகாசிக்க இந்த புண்ணியத்தால் எலி மறு பிற வியில் மகாபலி சக்கரவர்த்தியாக பிறக்கச் செய்தார்.

எம் பெருமான் சிவபெருமான்.ஓம் நமசிவாய

(விளக்கு சுட்டியில் ஏற்றுவது ஆலயத்தில் (தூய பசு நெய்))

அறியாமல் செய்த சிவபுண்ணியத்திற்கே இப்படி என்றால் அறிந்து செய்யும்சிவராத்திரி வழிபாட்டி னால் எல்லா நலன்களையும் தவறாமல் பெறலாம்.

ஓம் நமசிவாய

இந்த சிவராத்திரி தகவல் முன்னோர் காட்டிய ஆவணப்படுத்தி அனைத்து சைவமக்களிடமும் ஒன்று சேர்த்து சிவ புண்ணியத்துக்கு ஆளாகி நாமும் நலம் பெற "சிவன்" சிவ.சிவ எனவும் திருமுறைகளும் ஓதுவோம்.



க.கு.க சிவபாலன்
போசகர்
காரைநகர் திருத்திண்ணபுர
மாணிக்கவாசகர்
மடாலயம்.

(சி-8487)

சிவமயம்
ஸ்ரீ பார்வதி சமேத பரமேஸ்வரன் கோவில்
யாழ் பல்கலைக்கழகம்

## மகா சிவராத்திரி விழா -2024

08/03/2024

| விடயம் | அபிஷேகம் | பூசை நேரம் |
|---|---|---|
| பிரதோஷம் | 3.30 | 5.00 |
| மகா சிவராத்திரி 1 ஆம் சாமம் | 6.00 | 7.30 |
| மகா சிவராத்திரி 2 ஆம் சாமம் | 9.00 | 10.30 |
| மகா சிவராத்திரி 3 ஆம் சாமம் | 12.00 | 1.30 |
| மகா சிவராத்திரி 4 ஆம் சாமம் | 3.00 | 4.30 |

கலை நிகழ்வுகள்

| நிகழ்வு | நேரம் | பங்கேற்பாளர்கள் |
|---|---|---|
| பேச்சு:சைவத்தில் சிவலிங்கம் | 8.00 P.m | மாணவன், இணைந்த சுகாதார விஞ்ஞானபீடம். |
| பக்திப்பாடல்கள் | 8.10 P.m | இணைந்த சுகாதார விஞ்ஞானபீட மாணவர்கள் |
| நாட்டியம் | 8.40 P.m | சித்த மருத்துவதுறை மாணவர்கள் |
| திருமுறை இசை அரங்கு | 11.00 P.m | முனைவர்.ஸ்ரீநாகபூசணி அரங்கராஜ் (சிரேஷ்ட விரிவுரையாளர், இசைத் துறை, யாழ்.பல்கலைக்கழகம்) வயலின்: திருமதி.வனஜா ஈஸ்வர சர்மா.(அபிவிருத்தி மேல் நிலை உத்தி யோகத்தர், பிரதேச செயலகம், உடு வில்) மிருதங்கம்:திரு.கி.அனந்த கோபன்(கலாவித்தகர்) |
| நாட்டியம் | 11.30 p.m | சேர். பொன்னம்பல ராமநாதன் காண் பிய ஆற்றுகை கலைகள் பீடம். |
| பேச்சு:தமிழர் வாழ்வில் சிவன் | 1.30 a.m | மாணவன்.மருத்துவ பீடம் |
| கவிதை: சைவநெறியில் பெண்ணியம் | 1.40 a.m | மாணவி. மருத்துவ பீடம். |
| பஜனை | 1.50 a.m | இந்து கற்கைகள் பீட மாணவர்கள் |
| பட்டிமன்றம் | 2.00 a.m | கலைப்பீட மாணவர்கள் |

ஸ்ரீ பார்வதி சமேத பரமேஸ்வரன் ஆலய பரிபாலன சபையும்
யாழ்.பல்கலைக்கழக இந்து மன்றமும்

# யானை தாக்குதலுக்கு இலக்கான நபரொருவர்

## மருத்துவமனையில் அனுமதி

(தருமபுரம்)

யானை தாக்குதலுக்கு இலக்கான ஒருவர் மருத்துவமனையில் அனு மதிக்கப்பட்டுள்ளார்.

கிளிநொச்சி ஜெயபுரம் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட கிறாஞ்சி சிவபுரம் பகுதியில் நேற்று முன்தினம் இரவு 50 வயது மதிக்கத்தக்க ஒருவரை யானை தாக்கியதில் படுகாயம் அடைந்த நபர் முழங்காவில் மருத்துவமனையில் அனுமதிக் கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக கிளிநொச்சி மருத்துவமனைக்கு அனுமதிக்கப்பட்டுள்ளார்.

(நி-5-6-316)

# சவேந்திரசில்வா உள்ளிட்ட பாதுகாப்பு உயர்மட்ட குழு யாழ். விஜயம்

(யாழ்ப்பாணம்)

பாதுகாப்பு பதவி நிலை பிரதானி ஜெனரல் சவே ந்திர சில்வா மற்றும் விமானப்படைத் தளபதி எயார் மார்ஷல் உதேனி ராஜபக்ஷ உள்ளிட்ட பாது காப்பு உயர் மட்ட குழு வினர் யாழ் மாவட்ட த்திற்கு நேற்றைய தினம் விஜயம் செய்தனர். இதன் போது யாழ்.மாவட்ட இரா ணுவத்தளபதி, விமானப் படையினர் உள்ளிட்ட பல ரும் கலந்துகொண்டனர்.

"நட்பின் சிறகுகள்" எனும் தொனிப்பொருளில் யாழ். முற்றவெளி மைதா னத்தில் நேற்று முன் தினம் ஆரம்பமான நிலை யில் குறித்த கண்காட்சி நாளை மறுதினம் ஞாயி ற்றுக்கிழமை காலை 10 மணி முதல் இரவு 11 மணி வரை இடம்பெறவுள்ளது.

இலங்கை விமானப் படையின் 73ஆவது வருட நிறைவை முன்னி ட்டு "வான் சாகசம் - 2024" கண்காட்சி நிகழ்வு கள் யாழில் நடைபெற்று வருகின்ற நிலையில் குறி த்த நிகழ்வில் பங்கேற் பதற்காகவே வருகை தந் திருந்தமை குறிப்பி த்தக்கது. (நி-5-6-33)

# சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | நெல்லியடி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 200 | 150 | 180 | 220 | 200 |
| உருளைக்கிழங்கு | 160 | 190 | 170 | 170 | 200 |
| பச்சைமிளகாய் | 350 | 350 | 400 | 320 | 400 |
| தக்காளி | 280 | 250 | 300 | 250 | 400 |
| மரவள்ளிக்கிழங்கு | 120 | 130 | 120 | 120 | 200 |
| கோவா | 350 | 350 | 400 | 300 | 400 |
| கரட் | 350 | 450 | 450 | 350 | 500 |
| பூசணி | 250 | 200 | 200 | 180 | 250 |
| புடோல் | 180 | 150 | 180 | 120 | 200 |
| வாழைக்காய் | 200 | 180 | 200 | 130 | 250 |
| சின்ன வெங்காயம் | 250 | 250 | 300 | 200-300 | 300 |
| பெரிய வெங்காயம் | 400 | 350 | 400 | 380 | 400 |
| பாகற்காய் | 450 | 300 | 400 | 380 | 400 |
| வெண்டக்காய் | 200 | 250 | 200 | 140 | 400 |
| கருணைக் கிழங்கு | 120 | 100 | 120 | -- | 150 |
| பயற்றங்காய் | 350 | 250 | 400 | 400 | 500 |
| லீக்ஸ் | 350 | 450 | 300 | 300 | 400 |
| பீற்றூட் | 250 | 250 | 350 | 250 | 400 |
| கறிமிளகாய் | 400 | 400 | 350 | 350 | 400 |
| முருங்கைக்காய் | 1200 | 1300 | 800-1000 | 1400 | 1600 |
| போஞ்சி | 400 | 200 | 400 | 300 | 400 |
| கத்தரிதம்புள்ள | 180 | 100 | 180 | -- | 200 |
| கீரை - 1 பிடி | 80 | 100 | 80 | 50 | 100 |
| தேசிக்காய் | 150 | 250 | 150 | 200 | 200 |
| தேங்காய் (ஒன்று) | 100 | 110 | 90 | 40-80 | 70-100 |
| இராசவள்ளி | 350 | 450 | 400 | -- | 400 |
| வெங்காயப்பூ | 150 | 200 | 200 | 100 | 300 |
| முள்ளங்கி | 80 | 100 | 320 | 70 | 200 |
| பொன்னாங்காணி | 80 | 100 | 120 | 100 | 60 |
| வல்லாரை | 60 | 50 | 100 | 120 | 80 |
| ஈரப்பலா | 80 | 150 | 150 | 70 | 200 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்கியின் பொன்னியின் செல்வன்

பாகம் - 2

காவியத் தொடர் 425





நாற்பத்தொன்றாம் அத்தியாயம்

**"அதோ பாருங்கள்!"**

சேநாபதி பூதி விக்கரமகேசரி கூறிய செய்தியைக் கேட்டதும் இளவரசரின் முகத்தில் புன்னகை அரும்பியது.

"கடைசியாக என் உள்ளத்தின் போராட்டத்துக்கு ஒரு முடிவு வந்துவிட்டது போல் காண்கிறது" என்று மெல்லிய குரலில் தமக்குத்தாமே பேசிக்கொள்கிறவர் போலச் சொல்லிக் கொண்டார்.

பார்த்திபேந்திரன் கொதித்தெழுந்தான். "சேநாதிபதி! என்ன சொன்னீர்? இது உண்மைதானா? என்னிடம் ஏன் இது வரையில் சொல்லவில்லை? இந்தப் பித்துக்குளிப் பெண்ணை நீர் நம்முடன் கட்டி இழுத்து வந்ததற்குக் காரணம் இப் போதல்லவா தெரிகிறது? மறுபடியும் கேட்கிறேன் பழுவேட்டரையர்கள் இளவரசரைச் சிறைப்படுத்திவரக் கப்பல்களை அனுப்பியிருப்பது உண்மையா?" என்று கேட்டான்.

"ஆம், ஐயா! இந்தப் பெண் கண்ணால் பார்த்ததாகவும், காதால் கேட்டதாகவும் கூறுவதை நம்புவதாயிருந்தால் அது உண்மைதான்!"

"ஆகா! அந்தக் கிழவர், திருக்கோவலூர் மிலாடுடையார், கூறியது உண்மையாயிற்று. பழுவேட்டரையர்களை உள்ளபடி உணர்ந்தவர் அவர்தான்! சேநாதிபதி! இத்தகைய செய்தியை அறிந்த பிறகும் ஏன் சும்மா இருக்கிறீர்? பராந்தக சக்கரவர்த்தியின் குலத்தோன்றலை, சுந்தர சோழரின் செல்வப் புதல்வரை, நாடு நகரமெல்லாம் போற்றும் இளவரசரை, தமிழகத்து மக்களெல்லாம் தங்கள் கண்ணினுள் மணியாகக் கருதும் செல்வரை, ஆதித்த கரிகாலருடன் பிறந்த அருள்மொழிவர்மரை, இந்த அற்பர்களாகிய பழுவேட்டரையர்கள் சிறைப்படுத்தி வர ஆட்களை அனுப்பும்படி ஆகிவிட்டதா? இனியும் என்ன யோசனை? உடனே படைகளுடன் புறப்பட்டுச் சென்று இளவரசரைச் சிறைப்படுத்த வந்தவர்களை அழித்து இந்த இலங்கைத் தீவிலேயே அவர்களுக்குச் சமாதியை எழுப்புவோம்! பிறகு நாம் போட்ட திட்டத்தின்படி காரியத்தை நடத்துவோம்! கிளம்புங்கள்! இன்னும் ஏன் தயக்கம்?" என்று பார்த்திபேந்திரன் பொரி பொரித்துக் கொட்டினான்.

சேநாதிபதி பூதி விக்கிரமகேசரி அவனைப் பார்த்து "பார்த்திபேந்திரா! நீ இப்படித் துடிப்பாய் என்று எண்ணித்தான் நான் முன்னமே இந்தப் பெண் கொண்டு வந்த சேதியை உன்னிடம் சொல்லவில்லை. நன்றாக யோசித்துச் செய்ய வேண்டிய காரியம். அவசரப்படுவதில் பயனில்லை!" என்றார்.

"யோசனை செய்ய வேண்டுமா? என்ன யோசனை? எதற்காக யோசனை? இளவரசே! நீங்கள் சொல்லுங்கள். இனி யோசிப்பதற்கு என்ன இருக்கிறது? இதற்கு முன் ஏதேனும் தங்களுக்குத் தயக்கமிருந்திருந்தாலும், இனி தயங்குவதற்கு இடமில்லையே? பழுவேட்டரையர்களைப் பூண்டோடு அழித்து விட வேண்டியது தானே?"

அப்போது இளவரசர், "சேநாதிபதியின் மனத்தில் உள்ளதையும் தெரிந்து கொள்ளலாமே? ஐயா! தாங்கள் எதைப் பற்றி யோசிக்க வேண்டும் என்கிறீர்கள்?" என்று எவ்விதப் படபடப்புமின்றி நிதானமாகக் கேட்டார்.

"தங்களைச் சிறைப்படுத்துவதற்கு இந்த வார்த்தைகளைச் சொல்லவும் என் வாய் கூசுகிறது ஆனாலும் சொல்ல வேண்டியிருக்கிறது. தங்களைச் சிறைப்படுத்த வந்திருப்பவர்களின் சக்கரவர்த்தியின் கட்டளையோடு வந்திருந்தால் நாம் என்ன செய்வது? அப்போதும் அவர்களை எதிர்த்துப் போரிடுவதா?"

இதைக் கேட்ட பார்த்திபேந்திரன் கடகடவென்று சிரித்து விட்டு, "அழகாயிருக்கிறது, தங்கள் வார்த்தை! சக்கரவர்த்தி சொந்தமாகக் கட்டளை போடும் நிலையில் இருக்கிறாரா? அவரையேதான் பழுவேட்டரையர்கள் சிறையில் வைத்திருக்கிறார்களே!" என்றான். (தொடரும்...)



# சிறுவர் அரங்கம்

## ஒற்றுமையே வலிமை

கோவில் கோபுரத்தில் சில ஊதா நிறப் புறாக்களும் சில மஞ்சள் நிறப் புறாக்களும் அடைக்கலமாகி இருந்து வந்தன.

கோபுரத்தில் திருவிழா வேலைகள் தொடங்க ஆரம்பித்ததால் இது நாள் வரை எதிரும் புதிருமாக இருந்து வந்த இருவகைப் புறாக்கூட்டமும் இப்போது ஒன்று கூடிவேறொரு இடம் தேடி புறப்பட்டன.



செல்லும் வழியில் ஒரிடத்தில் வெயிலில் உலர்த்துவதற்காக பரப்பப்பட்ட தானியங்களை கண்டதும் அனைத்தும் ஒன்று கூடி தானியங்களை தின்று தீர்த்து விட்டு மரக்கிளை ஒன்றில் அமர்ந்தன.

தானியத்தை உலர்த்தும் பொருட்டு பரப்பி விட்டு சென்ற வேடன் தானிய மணிகள் ஒன்று கூட இல்லாதது கண்டு அதிர்ச்சியடைந்தான். தானியங்கள் காயப் போட்ட இடத்தில் புறாக்களின் எச்சம் கிடப்பதைப் பார்த்து வேடன் என்ன நடந்தது என்பதை ஊகித்தான்.

நாளைக்கு இந்தப்புறாக்களை எப்படியும் வலை விரித்து பிடித்து விட வேண்டும் என்று முடிவு செய்து அதன்படி மறு நாள் தயார் செய்து வலை விரித்தான்.

அடுத்த நாள் அங்கே வந்த புறாக்கள் தானியத்தைப் பார்த்ததும் அதை உண்ணும் ஆசையில் வேகமாக தரை யிறங்கி உண்ணத் தொடங்கின. சில மணித்துளிகளில் அதன் கால்கள் வலைகளில் சிக்கிக் கொண்டன.

சற்று தொலைவில் மறைந்திருந்த வேடன் நிலைமையை நன்கு புரிந்து கொண்டு புறாக்களை பிடிக்க ஓடி வந்தான். வேடன் வருவதைப் பார்த்த புறாக்கள் ஆபத்தை உணர்ந்து கொண்டு. உயிர் மீதுள்ள ஆசையினால் புறாக்கள் எல்லாம் ஒன்றாக இறக்கையை விரித்து பறக்க ஆரம்பித்தன.

உடனே வேடன் அய்யய்யோ.. புறாக்கள் போனாலும் பரவாயில்லை. நான் கஷ்டப்பட்டு தயாரித்த வலையும் அதோடு போகிறதே...." என்று புலம்பிக்கொண்டே, பறந்து செல்லும் புறாக்களின் பின்னே ஓடினான்.

பறந்து செல்லும் போதே அதில் இருந்த மஞ்சள் புறாக்கள் கர்வத்தோடு, எங்களது வலிமையால்தான் நீங்களும் காப்பாற்றப்பட்டு இருக்கிறீர்கள். நாங்கள் சிறகை மிக வேகமாக அடித்து பறக்கவில்லை என்றால் அவ்வளவு தான்" என்று கூறின.

உடனே ஊதா நிறப் புறாக்களும் தம் பங்குக்கு, "நாங்கள்தான் வலிமையோடு பறந்தோம். உங்களுக்கு அழகு இருக்கலாம், ஆனால் ஆற்றல் கிடையாது" என்று கூறிக்கொண்டு ஒன்றுக்கொன்று சண்டையிட்டுக் கொண்டே பறந்ததினால், அதன் பறக்கும் வேகம் குறைய ஆரம்பித்து, ஒரு மரக் கிளையில் வலை சிக்கிக் கொண்டது.

இதனைப் பார்த்த வேடனுக்கு மகிழ்ச்சி ஏற்பட்டது. ஒற்றுமையே வலிமை என்ற பழமொழிக் கேற்ப இப்புறாக்கள் தப்பிவிடுமோ என்று பயந்தான். நல்ல வேளையாக "ஒற்றுமை நீங்கினால் அனைவருக்கும் தாழ்வு என்ற நெறிப்படி பறந்த புறாக்களே நன்றி" என்று புறாக்களைப் பார்த்து கூறிக் கொண்டே அவைகளை தனது கூடைக்குள் போடத் தொடங்கினான்.

நீதி : எப்பொழுதும் ஒற்றுமையே சிறந்தது!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குறிக்கோளை அடையும் முயற்சியில்தான் மகிமை இருக்கிறது. அந்த குறிக்கோளை அடைவதில் இல்லை. – காந்திஜி

வலம்புரி

TP: 021 222 3378

website : www.valampurii.lk

## நாங்கள் ஒற்றுமைப்படமாட்டோம் இதுதான் எங்களின் தலைவிதி

வடக்கு மாகாண ஆளுநரைச் சந்திக்கின்ற உள்நாட்டு வெளிநாட்டுப் பிரதிநிதிகள் வழங்குகின்ற உத்தரவாதங்களைப் பார்க்கும்போது, இனி தமிழ் மக்களுக்கு எந்தக் குறையும் இல்லை என்பதுபோல நிலைமை இருக்கும்.

அந்தளவுக்கு அவர்கள் அதனைத் தருவோம். இதனைச் செய்வோம். வடக்கின் அபிவிருத்திக்கு உதவுவோம் என ஆளுநரிடம் கூறுகின்றனர்.

ஆனால் அவர்கள் ஏதேனும் தந்தார்களா என்றால் இல்லவே இல்லை.

இந்நிலைமை ஒருபுறமிருக்க, அரசாங்க மட்டத்தில் அதிகாரப் பகிர்வு, அபகரிக்கப்பட்ட காணி விடுவிப்பு என்பதான உத்தரவாதங்கள் அளிக்கப்படுகின்றன.

ஆனால் ஈற்றில் எதுவும் இல்லை என்பது தான் முடிவு.

ஆக, இலங்கை அரசாங்கம் நமக்கு எதுவும் தராது என்பது தெரிந்த உண்மை.

இதை நாம் கூறும்போது அப்படியானால் எதற்காகத் தமிழ்த் தரப்புகள் ஜனாதிபதியைச் சந்திக்கின்றன என நீங்கள் கேள்வி எழுப்பலாம்.

இங்குதான் ஓர் உண்மையை நாம் கூறியாக வேண்டும். அதாவது இலங்கை அரசாங்கம் நமக்கு எதுவும் தராது என்பது நம் தமிழ் அரசியல் தரப்புகளுக்கு நன்கு தெரியும்.

அப்படித் தெரிந்திருந்தும் எதற்காக அரசாங்கத்துடன் கதைத்துக் காலத்தை ஓட்ட வேண்டும் எனக் கேட்டால், அதுதான் அரசியல்.

ஆம், அரசியலில் நிலைத்திருப்பதாக இருந்தால், உண்மை கூறுவதை முதலில் துறந்தாக வேண்டும்.

ஆக, அதிகாரப் பகிர்வு பற்றிப் பேசுவது தான் நாங்களும் அவர்களும் திறந்த கடையைத் தொடர்ந்து நடத்துவதற்கான ஒரே வழி.

எனவே அவர்கள் எதுவும் தரமாட்டார்கள் என்று கூறுவதற்கு எங்களில் எவரும் தயாரில்லை.

இதற்கு நல்ல உதாரணம் பாராளுமன்ற உறுப்பினர் நீதியரசர் சி.வி.விக்னேஸ்வரன் அவர்கள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இனப் பிரச்சினைக்குத் தீர்வு காண்பார் எனத் தனது நம்பிக்கையை ஆரம்பத்தில் வெளியிட்டிருந்தார்.

இதற்கும் மேலாக, ரணில் விக்கிரமசிங்கவுக்கான தனது ஆதரவையும் அவர் வெளிப்படுத்தியிருந்தார்.

ஆனால் இப்போது ஜனாதிபதி ரணில் மீது அவநம்பிக்கை ஏற்பட்டுள்ளது போல நீதியரசர் விக்னேஸ்வரன் அமைதியாகி விட்டார்.

இதைத்தான் நாம் நாளும் கூறிவருகிறோம். அதாவது சிங்கள ஆட்சியாளர்கள் எவரும் எங்களின் பிரச்சினைக்கான தீர்வை ஒருபோதும் முன்வைக்கப் போவதில்லை.

அதேநேரம் நாங்களும் இராஜதந்திர வியூகங்களை அமைத்து எங்களின் உரிமையை வென்றெடுக்கவும் மாட்டோம்.

அவ்வாறு இராஜதந்திர வியூகங்களை அமைத்தால் எங்களின் உரிமையை நிச்சயம் பெற்றுக் கொள்ள முடியும்.

ஆனால் அது நடக்கப் போவதில்லை. ஏனெனில் எங்களிடம் தானே ஒற்றுமையில்லை. ஒற்றுமைப்படாதவர்களால் பகை, சண்டை, கோபம், காட்டிக்கொடுத்தல் என்பதைத் தவிர வேறு எந்த ஆரோக்கியமான செயலையும் செய்ய முடியாது.

அதனால்தான் சொல்கிறோம் எங்களால் எங்களுக்கு எந்த நன்மையும் ஆகிவிடாது. இதுவே நம் தலைவிதி.

# 338 சிற்றூழியர்களுக்கு நிரந்தர நியமனம் வழங்குங்கள்

## பிரதமரைச் சந்தித்து வடக்கு ஆளுநர் கோரிக்கை

(கொழும்பு)

வடக்கு மாகாணத்தில் தற்காலிக, பதிலீட்டு, சாதாரண மற்றும் தினக்கூலி அடிப்படையில் சேவையாற்றும் 388 பேருக்கான நிரந்தர நியமனத்தை வழங்குவதற்கு அமைச்சரவை அனுமதியை பெற்றுத்தருமாறு வடக்கு மாகாண ஆளுநர் பி.எஸ்.எம்.சார்ள்ஸ் அவர்கள், பிரதமர் தினேஷ் குணவர்தனவை நேரில் சந்தித்து கோரிக்கை விடுத்துள்ளார்.

பாராளுமன்ற கட்டடத் தொகுதியில் அமைந்துள்ள பிரதமரின் அலுவலகத்தில் நேற்று இச் சந்திப்பு நடைபெற்றது.

வடக்கு மாகாண விவசாய அமைச்சில் பணியாற்றும் 67 பேருக்கும், உள்ளூராட்சி அமைச்சின் கீழுள்ள பிரிவுகளில் கடமையாற்றும் 321 பேருக்கும் நிரந்தர நியமனம் வழங்கப்பட வேண்டும் என ஆளுநர் தெரிவித்துள்ளார்.

அவசர மற்றும் அத்தியாவசிய தேவைகருதி சேவையில் இணைக்கப்பட்டவர்களுக்கான நிரந்தர நியமனம் வழங்கப்பட வேண்டும் எனவும், இவர்களின் அனுபவம் மற்றும் துறைசார்ந்த திறன், அறிவை தொடர்ச்சியாக பெற்றுக்கொள்வதனூடாக எதிர்காலத்தில் ஏற்படக்கூடிய அவசர நிலைகளை ஈடுகொடுக்க கூடியதாக அமையும் எனவும் ஆளுநர், பிரதமரிடம் தெரிவித்துள்ளார்.

தற்காலிகமாக சேவையில் இணைத்துக் கொள்ளப்பட்டவர்கள், நிரந்தர நியமனங்களை பெற்றுக் கொள்ள காத்திருப்பதாக தெரிவித்த ஆளுநர், அவர்களின் பெயர்பட்டியல் அடங்கிய கோரிக்கை கடிதத்தையும் பிரதமரிடம் சமர்பித்துள்ளார். விசேட திட்டத்தின் கீழ் இவர்களுக்கான நிரந்தர நியமனங்களை வழங்குவதற்கான அமைச்சரவை அனுமதியை பெற்றுத் தருமாறும் ஆளுநர், பிரதமரிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

இதேவேளை, ஒரு இலட்சம் வேலைவாய்ப்பின் அடிப்படையில் வழங்கப்பட்ட சிற்றூழியர் நியமனங்கள் வடக்கு மாகாணத்தில் முழுமையாக நிரப்பப்படவில்லை எனவும் இதனால் வடக்கு மாகாணத்திலுள்ள அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களில் சிற்றூழியர்களுக்கான வெற்றிடங்கள் காணப்படுவதாகவும் அவர் குறிப்பிட்டார்.

இந்த வெற்றிடங்களை நிரப்பி, சிறந்த பொதுச் சேவையை வழங்குவதற்கு ஆவன செய்யுமாறும்வடக்குமாகாண ஆளுநர், பிரதமரிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

வடக்கு மாகாண ஆளுநரின் கோரிக்கை கடிதத்தை பெற்றுக் கொண்ட பிரதமர் தினேஷ் குணவர்தன, இந்த விடயம் தொடர்பில் விரைவில் சாதகமான பதிலை வழங்குவதாக உறுதியளித்தார். (ந-7,10)

# வளமிக்க நாட்டை கட்டியெழுப்ப பெண்களின் ஒத்துழைப்பு அவசியம்

## மகளிர்தின வாழ்த்துச் செய்தியில் ஜனாதிபதி தெரிவிப்பு

(கொழும்பு)

நாட்டைக் கட்டியெழுப்புவதற்கான அரசாங்கத்தின் திட்டத்திற்கு ஒட்டுமொத்த பெண்களின் ஒத்துழைப்பை எதிர்பார்ப்பதாக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

மகளிர் தினத்தை முன்னிட்டு ஜனாதிபதியால் வெளியிடப்பட்ட வாழ்த்துச் செய்திலேயே அவர் இதனை குறிப்பிட்டுள்ளார்.

அதில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது,

பாரம்பரிய வகிபாகங்களுக்கு அப்பாற்பட்ட அறிவு, திறன் மற்றும் தொழில் தன்மையுடன் கூடிய இலங்கைப் பெண்கள் இன்று இந்நாட்டின் பொருளாதாரத்திற்குத் தனித்துவமானப் பங்களிப்பை வழங்கி வருகின்றனர்.

இத்தகைய பின்னணியில் குடும்பம் மட்டுமின்றி சமூகத்திலும் பல்வேறு பொறுப்புகளை ஏற்றுக் கொண்டிருக்கும் பெண்கள் நாட்டின் அபிமானத்திற்குரியவர்கள்.

நிலையான அபிவிருத்திக்கான பயணத்தில் பெண்களின் பங்களிப்பை மேலும் பலப்படுத்த அரசாங்கம் தற்போது விரிவான வேலைத் திட்டங்களை முன்னெடுத்து வருவதோடு, டிஜிட்டல் மற்றும் பசுமைப் பொருளாதாரத்திற்காக பெண் தொழில் முனைவோரை வலுவூட்டுவதே அரசாங்கத்தின் நோக்கமாகும்.

அத்தோடு அரசியலில் பெண்களின் பிரதிநிதித்துவத்தை அதிகரிக்கத் தேவையான சட்ட திருத்தங்களையும் அரசாங்கம் மேற்கொண்டு வருகிறது.

எதிர்கால சந்ததியினருக்கு மிகவும் பாதுகாப்பான மற்றும் வளமிக்க நாட்டைக் கட்டியெழுப்புவதற்கான அரசாங்கத்தின் திட்டத்திற்கு ஒட்டுமொத்த பெண்களின் ஒத்துழைப்பை எதிர்பார்ப்பதோடு, சர்வதேச மகளிர் தின வாழ்த்துக்களைத் தெரிவிக்கிறேன் எனவும் அதில் குறிப்பிடப்பட்டுள்ளது. (ந-7,10)

# இரு மாதங்களில் - 112 சிறுமிகள் கருத்தரிப்பு

(கொழும்பு)

இவ்வருடத்தின் இதுவரையான காலப்பகுதியில் 16 வயதுக்குட்பட்ட 112 சிறுமிகள் கருத்தரித்துள்ளதாக தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபை தலைவரும் சிரேஷ்ட விரிவுரையாளருமான உதயகுமார அமரசிங்க தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

நாட்டில் சிறுவர் பாலியல் துஷ்பிரயோகங்கள் அதிகரித்துவரும் நிலையில் கடந்த 2022 ஆம் ஆண்டில் 1,232 சிறுவர் பாலியல் துஷ்பிரயோகங்கள் பதிவாகியுள்ளது.

மேலும் 2023 ஆம் ஆண்டில் 1,497 சிறுவர் பாலியல் துஷ்பிரயோகங்கள் பதிவாகியுள்ளன. கடந்த செப்டெம்பர் மாதம் 168 சிறுமிகள் பாலியல் துஷ்பிரயோகங்களுக்கு உள்ளாகியுள்ள நிலையில் அவர்களில் 16 வயதுக்குட்பட்ட 112 சிறுமிகள் கருத்தரித்துள்ளனர்.

நீதிமன்றில் பதிவாகியுள்ள வழக்குகள் அடிப்படையில் 10 முதல் 16 வயதுக்குட்பட்ட சிறுமிகளே அதிகளவில் பாலியல் துஷ்பிரயோகங்களுக்குள்ளாகி வருவதாக தெரியவருகிறது.

பாலியல் துஷ்பிரயோகங்கள் தொடர்பில் கைது செய்யப்பட்டு தண்டனை பெற்றவர்களில் சிலர் அவர்களது தண்டனை காலம் முடிவைந்த பின்னர் மீண்டும் சமூகத்திற்குள் வந்து அந்த தவறுகளைத் தொடர்ந்தும் செய்து வருகின்றனர்.

ஆகவே இவ்வாறு தண்டனை பெற்று மீண்டும் சமூகத்திற்குள் வரும் நபர்களிடம் இருந்து சிறுமிகள் பாதுகாப்பாக இருக்க வேண்டும் எனவும் இவ்வாறான பாலியல் துஷ்பிரயோகங்களைக் கட்டுப்படுத்த உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படும் எனவும் அவர் தெரிவித்தார். (ந-7,10)

## மக்களின் எதிர்ப்பையடுத்து சுழிபுரத்தில் இருந்த புத்தர் சிலை அகற்றப்பட்டது

(சுழிபுரம்)

யாழ்ப்பாணம் சுழிபுரம் பகுதியில் வைக்கப்பட்டிருந்த புத்தர் சிலையொன்று அண்மையில் சர்ச்சையை ஏற்படுத்திய நிலையில் குறித்த சிலை அங்கிருந்து அகற்றப்பட்டுள்ளது.

சுழிபுரம் சவுக்கடி பிள்ளையார் ஆலயத்திற்குப் பின் புறமாக உள்ள அரச மரத்தின் கீழ் குறித்த புத்தர் சிலை வைக்கப்பட்டிருந்தது.

அப்பகுதிக் கடற்படையினரால் புத்தர் சிலை வைக்கப்பட்டு இருக்கலாம் எனவும்அப்புத்தர்சிலையை அடுத்து விகாரை தோற்றம் பெறலாம் எனவும் அப்பகுதி மக்கள் சந்தேகம் வெளியிட்டுள்ளனர்.

இது தொடர்பில் ஊடகங்களில் செய்திகள் வெளியாகி பேசுபொருளான நிலையில் குறித்த புத்தர் சிலை அவ்விடத்திலிருந்து அகற்றப்பட்டுள்ளது. (ந- 7,10,33)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உலகத் தாய்மொழிகள் தினம் பெப்ரவரி 21 ஆம் திகதி



கலாநிதி க.தவலிங்கம்
ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம்.
தவிசாளர்- எல்லை நிர்ணய ஆணைக்குழு.

17

தமிழ் மற்றும் கிரந்த உயிர் மெய் எழுத்துக்கள் உரு - C இல் காட்டப்பட்டுள்ளன. தமிழில் உயிரெழுத்து இல்லாத கிரந்த எழுத்துக்கள் உரு- d இல் காட்டப்பட்டுள்ளன. ழ, ற மற்றும் ன வுக்கு கிரந்த எழுத்துக்களும் சிங்கள எழுத்துக்களும் இல்லை. ஆனால் மலையாளத்தில் எழுத்துக்கள் உண்டு.

**தமிழில் கலந்துள்ள வட சொற்கள் பற்றி....**

ஒரு மொழியானது தனக்குள்ளாகவே சொல்வளம் மிகுந்திருப்பது. அதிலும் நம் தமிழைப் போன்ற தொன்மையான மொழியில் சொற்களுக்குப் பஞ்சமே இல்லை. தமிழில் மூன்று இலட்சம் முதல் ஆறு இலட்சம் வரையிலான சொற்கள் இருந்தன என்கிறார்கள். ஆனால், அவ்வளவு சொற்களும் தமிழ் மொழியகராதிகளில் பட்டியலிடப்படவில்லை.

இன்றைக்கு ஆங்கிலம் எப்படித் தமிழோடு தொடர்ந்து கலந்து வருகிறதோ அவ்வாறே சமஸ்கிருதம் எனப்படும் வடமொழியும் உருதும் தொடர்ந்து கலந்தன. (சமஸ்கிருத மொழியிலிருந்து தமிழ்மொழியில் கலந்து வரும் சொற்கள் வடசொற்கள் எனப்படும்.)

இன்றைக்குத் தமிழில் கலந்துள்ள ஆங்கிலச் சொற்களை எளிதில் அடையாளம் கண்டுபிடித்துவிடலாம். காபி, டீ, பஸ், ஸ்கூல், சைக்கிள் என்று பல ஆங்கிலச் சொற்களை நாம் அன் றாடம் பயன்படுத்தினாலும், அவை ஆங்கிலச் சொற்களே என்பது, நமக்கு நன்கு தெரியும்.

காபி என்பதற்குக் குளம்பி என்றும், டீ என்பதற்குத் தேநீர் என்றும், பேருந்து, பள்ளி, மிதிவண்டி என்றும் அச்சொற்களுக்கு நேரான தமிழ்ச்சொற்களைப் பயன்படுத் தவும் அறிந்திருக்கிறோம். ஆனால், தமிழில் கலந்துள்ள வடமொழிச் சொற்களை அறிந்து களைவது நம்மில் பலருக்கும் கடினமாக இருக்கிறது.

"மன்னிப்பு" என்பது உருது மொழிச் சொல் என்று நமக்குத் தெரியவில்லை. அதற்கு நேரான தமிழ்ச் சொல் "பொறுத்தருளல்" இதனை "மொழிஞாயிறு" தேவ நேயப் பாவாணர் ஆராய்ந்து கூறிய பிறகுதான் நமக்குத் தெரிந்தது.

அவசரம், ஆசை, ராணுவம், ஈனம், உச்சி, சங்கீதம், சஞ்சலம், சந்தர்ப்பம், சோதனை, தகனம், தந்தம், நகல், நயனம், நீதி, பரம்பரை, பலன், வசந்தம், வீரம் போன்ற சொற்கள் தமிழ்ச்சொற் களல்ல, இவையாவும் வடமொழிச் சொற்கள்.

வியப்பாக இருக்கிறதா? ஆம். அவை வடமொழிச் சொற்கள் என்பதற்கான எந்தத் தடயத்தையும் காட்டவில்லை. வடமொழியிலும் அதே பொருளில் அச்சொற்கள் பயன்பாட்டில் இருக்கின்றன. வடமொழிச் சொற்களில் பெரும்பாலானவை தமிழ்ச்சொற்களைப் போலவே இருப்பதால், நமக்குக் குழப்பம் வருகிறது.

ஒரு மொழியில் சொற்கள் எவ்வாறு தோன்றுகின்றன, அவற்றின் தோற்றுவாயும் தென்படுகிறதா என்பதை வைத்து அச்சொல் அம்மொழிக்குரியதா இல்லையா என்பதைக் கண்டுபிடிக்கிறார்கள்.

**சதுர எழுத்துக்கள்**

நேர் கோடுகள், வட்ட எழுத்து முறை, ஆகியவை மறைந்து சதுர எழுத்துக்கள் தோன்றின. கி.பி. பதினைந்தாம் நூற்றாண்டிற்கு பின்னர் சதுரம் சதுரமாக எழுதும் முறை தோன்றியது. தற்போது நாம் எழுதும் எழுத்துக்கள் சதுர எழுத்துக்கள் ஆகும் மூன்றாம் நூற்றாண்டில் இருந்து கி.பி. ஒன்பதாம் நூற்றாண்டு வரை ஈ ".!." நேர் கோட்டால் எழுதப்பெற்றது.பின்னர் பல மாறுதல்கள் ஏற்பட்டு ஈ என்று சதுர வடிவமைப்பு பெற்றது.தமிழில் மெய்யெழுத்துக்களுக்குத்தான் புள்ளிகள் உண்டு. க் ங் ச் ஞ் - மெய் எழுத்து.

**தமிழ் எழுத்துச் சீர்திருத்தம்**

உலக அளவில் எழுத்துகளின் வடிவங்கள் இருவகைகளில் மாற்றம் பெற்று வருகின்றன. இயல்பாக எழுத்து வடிவங்கள் மாற்றம் பெறுவது ஒருநிலை. திட்டமிட்டு எழுத்து வடிவங்களை மாற்றுவது மற்றொரு நிலை. இயல்பாக நிகழும் எழுத்து வடிவமாற்றங்களுக்குத் தனி மனி தர்கள் காரணமாக அமைவது இல்லை. எழுது பொருள்களின் தன்மையே முதன்மைக் காரணமாக அமைகின்றது. தொடக்கக் காலத்தில் † என்று எழுதப் பெற்ற க என்னும் எழுத்து காலப் போக்கில் இன்றைய நிலையை அடைந்தது. இதற்கு ஓலைச் சுவடியில் எழுதும் பொழுது கையை எடுக்காமல் எழுத்துகளை எழுதி வந்ததே காரணம் என்றும் குறிப்பிடுகின்றனர். இத்தகு மாற்றம் மெல்லமெல்ல நிகழ்ந்ததால் அம் மாற்றம் நிகழ்ந்த காலத்தைத் துல்லியமாக நம்மால் வரையறுக்க முடியவில்லை.

தமிழி எழுத்துகளிலிருந்து தமிழ் எழுத்துகளாகவும் வட்டெழுத்துகளாகவும் மாற்றம் பெற்ற காலத்தை இன்று வரை நம்மால் சரியாக வரையறுக்க முடியவில்லை. மேலும் ஒரே கல்வெட்டில் தமிழ் எழுத்துகளும் வட்டெழுத்துகளும் பயன்படுத்தப் பெற்றதையும் காண முடிகின்றது. இவற்றிற் கெல்லாம் அடிப்படை எழுத்து மாற்றங்கள், பண்டைக் காலத்தில் இயல்பாக நிகழ்ந்து வந்ததாகத்தான் இருக்க வேண்டும். எழுத்துகளின் வடிவ நிலையைத் திட்டமிட்டு மாற்ற முற்படுகையில், அதற்குத் தூண்டுகோலாக இருந்த வரை அறிய இயலும்.

(தொடரும்...)

## மரண அறிவித்தல்



### அமரர்.சபாபதிப்பிள்ளை தியாகராஜா

(Rtd.C.T.B Conductor)

**பிறப்பு: 18.09.1944**
**இறப்பு: 07.03.2024**

காரைநகர் கருங்காலியை பிறப்பிடமாகவும், பத்தர் கேணியடியை வதிவிடமாகவும் கொண்ட சபாபதிப்பிள்ளை தியாகராஜா 07.03.2024 அன்று இறைவனடி, சேர்ந்துவிட்டார். அன்னார் காலஞ்சென்ற சபாபதிப்பிள்ளை தங்கம்மா தம்பதியினரின் அன்பு மகனும், காலஞ்சென்ற R.T. ஆறுமுகம் அன்னம்மா தம்பதியரின் அன்பு மருமகனும், பராசக்தியின் அன்புக் கணவரும், தியாகேஸ்வரி, மதியழகன், சந்திரவித்தியா, வையந்திமாலா, ஜெயசித்திராதேவி, குலச்சந்திரன், கிருசாந்தி ஆகியோரின் பாசமிகு தந்தையும், அருந்தவராசா, மயூரகுமரன், ஜெயராணி, நித்தியானந்தசிவம், சந்திரகுமார், மயூரன் ஆகியோரின் பாசமிகு மாமனாரும், தாரணி, பவித்திரன், கபிலன், நிஷாயினி, கரிகாலன் ஆகியோரின் அன்புப் பேரனும், காலஞ்சென்ற கந்தசாமி, துரைச்சாமி மற்றும் ஜெயலட்சுமி, செல்வராணி, காலஞ்சென்ற பொன்னம்பலம் மற்றும் புனிதவதி ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் 08.03.2024 இன்று வெள்ளிக்கிழமை காலை 7.00 மணிக்கு அன்னாரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளிற்காக நீலங்காடு இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார் உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

**பத்தர்கேணியடி,**
**காரைநகர்.**
**தொ.இல: 074 074 2398**

(9387)

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

## குறைவடைந்த மின்கட்டணம் குறைவடையாத பொருட்களின் விலைகள்

(கொழும்பு)

மின்சாரக் கட்டணம் குறைக்கப்பட்டுள்ள நிலையில் பொருட்கள் மற்றும் சேவைகளின் விலைகளைக் குறைக்குமாறு வர்த்தகர்களுக்கு அழுத்தம் கொடுக்க வேண்டும் என மின்சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சர் கஞ்சன விஜேசேகர வலியுறுத்தியுள்ளார்.

ஜனாதிபதி ஊடகப் பிரிவில் நேற்று நடைபெற்ற விசேட செய்தியாளர் மாநாட்டில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கும் போதே அமைச்சர் இவ்வாறு வலியுறுத்தியுள்ளார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்" மின்சார கட்டணங்கள் உயர்த்தப்பட்ட போது பொருட்கள் மற்றும் சேவைகளின் விலைகளும் அதிகரிக்கப்பட்டன. ஆனால் தற்போது மின்சார கட்டணங்கள் குறைக்கப்பட்டுள்ளன.

எனவே உணவக உரிமையாளர்கள் உள்ளிட்ட பொதுச் சேவை வர்த்தகர்கள். பொருட்கள் மற்றும் சேவைகளின் விலைகளை குறைப்பதற்கு ஆர்வம் காட்டவில்லை. மின்சார கட்டணத்தைக் குறைப்பதன் பிரதிபலன் நிச்சயமாக மக்களுக்குச் சென்றடைய வேண்டும் என அவர் தெரிவித்தார். (நி-5-6)

## கண்ணீர் அஞ்சலி



மண்ணில் 02.04.1974
விண்ணில் 04.03.2024

குளமங்கால், மல்லாகத்தை பிறப்பிடமாகவும், பளையை வசிப்பிடமாகவும் கொண்ட
அமரர். திருமதி.

### ஜேசுதாசன் அனற்வசந்தகுமாரி

எமது சங்கத்தில் கடமை புரியும் கள.முகாமையாளர் திரு.அ.இதயராஜ் அவர்களின் அன்பு சகோதரியான அமரர் திருமதி.ஜேசுதாசன் அனற்வசந்தகுமாரி 04.03.2024 ஆம் திகதி மரணமடைந்துள்ளார். இவரது குடும்பத்தினருக்கும், உறவுகளுக்கும் எமது சங்கத்தின் அங்கத்தவர்கள், நிர்வாக சபை உறுப்பினர்கள், பணியாளர்கள் சார்பில் ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவித்துக்கொள்வதோடு அன்னாரின் ஆத்மா சாந்தி அடைய இறைவனை பிரார்த்திக்கின்றோம்.

(C-8490)

பிரிவால் துயருறும்: அங்கத்தவர்கள், நிர்வாக சபை உறுப்பினர்கள், பணியாளர்கள், சுன்னாகம் பனை, தென்னை வள அபிவிருத்தி கூட்டுறவுச் சங்கம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தென்னக்கோனு...

செய்யப்பட்டுள்ளது.

பொலிஸ்மா அதிபர் தேச பந்து தென்னக்கோன் மற்றும் சபாநாயகர் தலைமையிலான அரசியலமைப்பு பேரவை ஆகியன குறித்த மனுவில் பிரதிவாதிகளாக குறிப்பிடப்பட்டுள்ளன.

தேசபந்து தென்னக்கோனை பொலிஸ்மா அதிபராக நியமிப்பதற்கு அரசியலமைப்பு பேரவை உத்தியோகபூர்வமாக அங்கீகாரம் வழங்கவில்லை என மனுதாரர்கள் குறிப்பிட்டுள்ளனர். (ந-7,10)

## ஐ.எம்.எப்...

சர்வதேச நாணய நிதியத்தின் பிரதிநிதிகள் குழு நேற்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை சந்தித்தது.

நிதி அமைச்சில் இந்தச் சந்திப்பு இடம்பெற்றது.

சர்வதேச நாணய நிதியத்துடனான வேலைத்திட்டம் உரிய முறையில் செயற்படுவதாக சர்வதேச நாணய நிதியத்தின் இலங்கைக்கான பிரதிநிதிகள் குழுவின் பிரதானி பீட்டர் புரூவர் இதன்போது சுட்டிக்காட்டியுள்ளதுடன், இலங்கையின் பொருளாதாரம் மீண்டு வர ஆரம்பித்துள்ளமை குறித்து மகிழ்ச்சியடைவதாகவும் தெரிவித்துள்ளார்.

சர்வதேச நாணய நிதியத்தின் கடன் சலுகைத் திட்டத்தை உரிய முறையில் நடைமுறைப்படுத்துவதற்கு இலங்கை அதிகாரிகள் மேற்கொண்டுள்ள அர்ப்பணிப்பை அவர் பாராட்டியதாக ஜனாதிபதி ஊடகப்பிரிவு குறிப்பிட்டுள்ளது.

இலங்கைக்கு வழங்கப்பட்ட நீடிக்கப்பட்ட கடன் வசதி தொடர்பான இரண்டாவது மீளாய்விற்காக சர்வதேச நாணய நிதியத்தின் குழுவினர் நாட்டிற்கு விஜயம் மேற்கொண்டுள்ளனர்.

இந்த மீளாய்விற்கு பின்னர், கடன் சலுகைத் திட்டத்தின் மூன்றாம் தவணை விடுவிக்கப்படும். (ந-7,10)

## வடக்கில்...

ளது.

வெள்ளை ஈ தாக்கம் மன்னார், கிளிநொச்சி, யாழ்ப்பாணம் மாவட்டங்கள் உள்ளடங்கலாக வடக்கின் பல பகுதிகளிலும் நாளுக்கு நாள் அதிகரித்து வருவதாக தெங்குச் செய்கையாளர்கள் கவலை வெளியிட்டுள்ளனர்.

இந்நிலையில் இந்நோய்த்தாக்கம் தொடர்பில் கருத்து வெளியிட்டுள்ள ஓய்வுபெற்ற விவசாய சிரேஷ்ட அதிகாரி பீற்றர் சிங்கிளேயர்,

இலைகளின் பின்புறம் இச் சிறிய ஒரு சோடி இறக்கை கொண்ட கொசு அளவில் உள்ள ஈக்கள் தென்னை ஓலையின் பச்சையத்தை சாப்பிடுவதனால் ஓலைகள் காய்ந்து கருகிப் போகின்றது.

இதன் எச்சங்கள் கறுப்பு நிறமாக தென்னையின் கீழுள்ள மரங்களின் இலைகளில் விழுவதனால் இவை முதலில் கரும்புள்ளியாக மாறி பின்பு பூஞ்சன நோயின் தாக்கத்தினால் மண்ணிறமாக காய்ந்து காணப்படும்

சிலர் வெண்ணிற ஈக்களின் தாக்கத்தை கட்டுப்படுத்த ஓலைகளை முழுமையாக வெட்டி எரித்து விடுகின்றனர்.

ஆனால் ஒரு பாளையும் ஓலையும் ஒரு மாதத்தில் உருவாகின்றன. தென்னை காய்ப்பதற்கு குறைந்தது 10-15 ஓலைகள் அவசியம் எனவே ஓலைகளை வெட்டுவது பெரும் பாதிப்பையும் நட்டத்தையும் எற்படுத்தும்

குறிப்பாக தென்னை மரங்களில் அதிகம் பரவியிருந்த வெண் ஈக்கள் தற்போது அனைத்து வகையான மரங்களிலும் பரவியுள்ளதோடு அதிகளவு இனப்பெருக்கத்தையும் மேற்கொள்கின்றது

எனவே வெண் ஈக்களின் பரவல் தொடர்பில் அவதானமாகச் செயற்படுதல் வேண்டும்.

அத்துடன் குறித்த ஈக்கள் வாகனங்கள் மற்றும் மனிதர்கள் மூலம் பரவக் கூடியவை.

எனவே அரசாங்கம் இந்த நோய்தாக்கத்தை சாதரண ஒன்றாக கடந்து செல்லாது தேசிய அனர்த்தமாக கருதி கட்டுப்படுத்த முன்வர வேண்டும் என அவர் கோரிக்கை விடுத்துள்ளார். (ந-7,10)

## இலங்கை...

யில் மின்வடம் மூலமாக மின்சாரத்தினை விநியோகிக்கும் இணைப்பை அமைப்பது தொடர்பாக இரண்டு நாடுகளும் செயற்பட்டு வருவதாக மின்சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சின் செயலாளர் தெரிவித்தார்.

120 கோடி அமெரிக்க டொலர் செலவில் கடலுக்கடியில் மின்வடம் மூலமாக இருநாடுகளுக்கும் இடையே மின்சாரத்தினை விநியோகிக்கும் இணைப்பை அமைப்பது தொடர்பாக இருநாடுகளும் பணியாற்றி வருகிறது.

எரிசக்தித் துறை ஒத்துழைப்புக்கான இந்தியா-இலங்கை கூட்டு பணிக்குழுவின் 5ஆவது கூட்டம் கொழும்பில் கடந்த 28ஆம் திகதி இடம்பெற்றது.

இலங்கைக்கான இந்திய தூதுவர் சந்தோஸ் ஜாவும் பங்கேற்ற கூட்டத்தில் இலங்கை - இந்தியா மின் இணைப்புத் திட்டம் குறித்து விவாதிக்கப்பட்டுள்ளது.

இலங்கையின் வட மத்திய நகரமான அநுராதபுரம் மற்றும் சென்னைக்கும் இடையே மின்சாரம் கடத்தும் நேரடி இணைப்பு இத்திட்டத்தில் அமைக் கப்படுவது குறித்து விவாதிக்கப்பட்டது.

இந்தியாவில் 130 கி.மீ. தொலைவுக்கு நிலம் வழியாகவும், அதன் பிறகு இலங்கையின் மன்னார் பகுதிவரை கடலுக்கடியில் மின்வடம் மூலமாகவும் மின் இணைப்பு நிறுவப்பட திட்டமிடப்பட்டுள்ளது.

இந்நிலையில் திட்டம் தொடர்பாக தொழில்நுட்ப மதிப்பீடு செய்வதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் இருநாடுகளும் கையொப்பமிட்டுள்ளன.

மேலும், சட்ட கட்டமைப்புக்குள் இத்திட்டத்தை செயற்படுத்தவும் கூட்டத்தில் வலியுறுத்தப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இருப்பினும் அரசின் குறித்த திட்டங்களுக்கும் அதானி காற்றாலை திட்டத்துக்கும் பொதுமக்கள், சுற்றுச் சூழலாளர்கள், சிவில் அமைப்புக்கள் தமது கண்டனத்தை தொடர்ந்தும் தெரிவிக்கின்றமை குறிப்பிடத்தக்கது. (ந-7,10)

## பிரதம...

வடக்கு மாகாணத்தில் ஆளுநரின் செயலாளர், கல்வி அமைச்சின் செயலாளர் உள்ளிட்டபலபதவிகளை வகித்த இளங்கோவன்,

கடந்த இரண்டு ஆண்டுகளாக ஜனாதிபதி செயலகத்தின் மேலதிக செயலாளராகப் பணியாற்றி வரும் நிலையில், வடக்கு மாகாணப் பிரதம செயலாளராக நியமிக்கப்பட்டுள்ளார்.

அதேநேரம் தற்போதைய பிரதம செயலாளர் சமன்பந்துலசேன கொழும்புக்கு இடமாற்றப்பட்டுள்ளார். (ந-7,10)

## வெடுக்...

முன்னாயத்த பணிகளை மேற்கொள்ளச் சென்ற ஏனையவர்களினது தேசிய அடையாளஅட்டைகளும் சாரதி அனுமதிப் பத்திரங்களும் தொலைபேசிகளும் பொலிஸாரால் பறிமுதல் செய்யப்பட்டுள்ளன.

மேலும் ஆலயத்துக்கு எடுத்துச் சென்ற வாழை மரங்கள், தோரணங்கள் உள்ளிட்ட பொருட்களையும் பொலிஸார் அனுமதிக்கவில்லை எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஏற்கெனவே ஆலயத்தின் பொங்கல் உற்சவத்தினை தடுத்து நிறுத்த பல நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டது போன்றே சிவராத்திரி உற்சவத்தினை குழப்புவதற்கான நடவடிக்கைகளே இவையென அப்பகுதி மக்கள் குற்றம் சாட்டியுள்ளனர்.

வெடுக்குநாறிமலை ஆலயத்தில் பூஜை வழிபாடுகளை மேற்கொள்வதற்கு வவுனியா நீதிமன்றம் கடந்த வருடம் உத்தரவு வழங்கியிருந்தது. அந்த உத்தரவை நேற்றுமுன்தினம் நீதிமன்றம் மீண்டும் உறுதி செய்திருந்தது. இந்நிலையில் நீதிமன்ற தீர்ப்பினை மீறி பொலிஸார் கைது செய்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ந-7,10,299)

## கேதீச்சரத்தில்...

சாமப் பூஜையும் நள்ளிரவு 12 மணிக்கு லிங்கோற்பவ காலத்தில் மூன்றாம் சாமப் பூஜையும் அதிகாலை 3 மணியளவில் நான்காம் சாமப் பூஜையும் இடம்பெறும்.

மகா சிவராத்திரியின்போது அடியவர்கள் தங்கள் கரங்களினால் பலாவித் தீர்த்தம் எடுத்து கேதீச்சரத்தானுக்கு அபிஷேகம் செய்து வழிபட முடியும்.

இதேவேளை சிவராத்திரி உற்சவத்தின்போது அலங்கார மண்டபத்தில் விசேட கலை கலாசார நிகழ்சிகளும் இடம்பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ந-7,10)


தன நிதானய
திகதி - 2024.03.07
சீட்டிழுப்பு இலக்கம் - 1442
D 06 21 46 79 D
Double Chance 49807

மஹஜன சம்பத
திகதி 2024/03/07
சீட்டிழுப்பு இலக்கம் 5412
M 9 0 4 3 4 2
தேசிய லொத்தர் சபை

மெகா பவர்
திகதி 07/03/2024
சீட்டிழுப்பு இலக்கம் 1760
E 07 20 28 36 79
Double Chance 72870

லக்கி 7 VIP
திகதி 2024.03.07
சீட்டிழுப்பு இலக்கம் 0238
S 2 8 0 6 6 9 S
தேசிய லொத்தர் சபை

கொவிசெத
சீட்டிழுப்பு இலக்கம் 3654
சீட்டிழுப்பு திகதி 07.03.2024
Y 30 41 69 71
Y 23781
தேசிய லொத்தர் சபை

HANDAHANA
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 2024.03.07
சீட்டிழுப்பு இலக்கம் 0721
ரிஷபம் 06 27 53 62 ரிஷபம்
55125 07

உத்தியோகபூர்வ முடிவுகள்
07.03.2024 வெற்றி வாரம் 120 வர்ணம் மஞ்சள்
M 7 4 1 9 2 0
H
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 30,630,628.00
DLB தொலை பேசி: 011-2 333 546-47 Web: www.dlb.lk

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 2386 வர்ணம் பச்சை
சீட்டிழுப்பு திகதி 07.03.2024 தினம் வியாழன
04 19 20 60 P
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 76,816,686.40
DLB

சனிதா Shanida
திகதி 2024.03.07 வெற்றி வாரம் 4547 வர்ணம் சிவப்பு
23 42 57 71 H
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 52,189,050.80
DLB

ராசி
சீட்டிழுப்பு வாரம் 4098 வர்ணம் கபிலம்
சீட்டிழுப்பு திகதி 2024.03.07 தினம் வியாழக்கிழமை
30 50 53 58 தனுசு
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 10,012,080.00
DLB

ஆங்கில எழுத்து, சுப்பர் இலக்கம் மற்றும் வெற்றி இலக்கம்
M 36 05 19 49 71
1562 07.03.2024 வியாழன
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 510,412,886.20
DLB தொலை பேசி: 011-2 333 546-47

அத கோடிபதி ADA KOTIPATHI
வியாழக்கிழமை
வெற்றி வாரம்: 2212
வர்ணம்: இளம் நீலம்
சீட்டிழுப்பு திகதி: 2024.03.07
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 96,984,652.80
06 44 62 70 X
DLB


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

## சிங்களவர்களின்...

வுக்கு இராணுவம் அவசர கோரிக்கை ஒன்றையும் விடுத்துள்ளது.

சர்ச்சைக்குரிய விகாரை அமைந்துள்ள பகுதியில் 21 ஆயிரம் சிங்களக் குடும்பங்கள் வசித்ததாகவும் தமிழ் மக்கள் தங்களுடைய காணி என்று உரிமை கோருவதை ஏற்க முடியாது எனவும் இராணுவம் தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் தேசிய பாதுகாப்பு மேற்பார்வைக்குழுவில் ஆராயப்பட்டபோது அதற்குக் கடும் எதிர்ப்பு காட்டப்பட்டநிலையில் எவ்வித முடிவும் எட்டப்படவில்லை.

இதன்போது தையிட்டி விகாரை அமைந்துள்ள பிரதேசத்தில், 1960 ஆம் ஆண்டு முதல் வாழ்ந்த சிங்கள குடும்பங்களுக்கு அது சொந்தமானது எனவும், இருந்தபோதும் சில தமிழ் மக்களும் அதில் உரிமை கோருகின்றனர்.

இருப்பினும் விகாரை உள்ள 8 ஏக்கர் நிலத்தையும் சிங்கள மக்களோ, தமிழ் மக்களோ உரிமை கோர முடியாது. அது முழுமையாக விகாரைக்குரியது. அங்கே நிலம் இழக்கப்பட்டதாக எவராவது நிரூபணம் செய்தால் அதற்கு மாற்றுக் காணி வழங்கலாம் என பௌத்த சாசன அமைச்சு சார்பில் கலந்துகொண்டவர்களால் தெரிவிக்கப்பட்டது.

அதன்போது கருத்துரைத்த இலங்கை தமிழ் அரசுக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் இ.சாள்ஸ் நிர்மலநாதன்,

தையிட்டியில் உள்ள விகாரையின் பௌத்த பிக்கு 2017 ஆம் ஆண்டு தெல்லிப்பழை பிரதேச செயலாளருக்கு எழுத்தில் சமர்பித்த விண்ணப்பத்தில் தனது 20 பரப்பு நிலத்தை அடையாளம் காட்டுமாறு கோரியிருந்தார்.

அதாவது 1956ஆம் ஆண்டு விகாரையின் பெயரில் ஒருவர் அன்பளிப்பாக வழங்கிய உறுதி பௌத்த பிக்குவிடம் உள்ளது. அது அவர்களிற்கு உரித்தான நிலம் என நாமும் ஏற்றுக்கொள்கின்றோம்.

அதே நேரம் 2022 ஆம் ஆண்டு அப்பகுதி இராணுவ அதிகாரி, விகாரை அமைந்துள்ள 8 ஏக்கர் நிலத்தையும் விகாரையின் பெயரில் ஆவணத்தை கோரி மீண்டும் தெல்லிப்பழை பிரதேச செயலகத்திற்கு விண்ணப்பித்துள்ளார்.

அவ்வாறானால் இதற்கான அளவீடு யாரால், யாருடைய அனுமதியில் இராணுவத்தினரால் மேற்கொள்ளப்பட்டது? 1956 ஆம் ஆண்டு தையிட்டியில் 1.45 ஏக்கர் நிலம் மட்டுமே விகாரைக்குரியது.

இருந்தபோதும் அங்கே எந்தக் காலத்திலும் விகாரை இருந்த ஆவணங்களும் கிடையாது. இவை தவிர 13 தமிழ் குடும்பங்களிற்கு உரித்தான 6.54 ஏக்கர் நிலத்தையும் அபகரித்தே தற்போது 8 ஏக்கரில் விகாரை உள்ளது.

அந்த 6.54 ஏக்கர் நிலத்தை நீங்கள் எவ்வாறு சுவீகரிக்க முடியும்? அது முழுமையான சட்ட மீறல். அந்த 6.54 ஏக்கர் நிலமும் நில உரிமையாளர்களிடம் வழங்கப்பட்டே ஆக வேண்டும் எனத் தெரிவித்தார்.

அந்த நிலம் இராணுவ நில அளவையாளர்களால் அளவீடு செய்யப்பட்டு வரைபடம் வழங்கப்பட்டது என இராணுவ அதிகாரி, பதிலளித்தபோது அங்கு பெரும் சர்ச்சை ஏற்பட்டது.

மக்களிற்குச் சொந்தமான நிலத்தை இராணுவம் மூலம் அடாத்தாகப் பிடித்து வைத்துக்கொண்டு, அந்த நிலத்தை இராணுவமே அளவீடு செய்து, சுவீகரித்துத் தருமாறு கோருவது எந்தச் சட்ட ஏற்பாட்டில் உள்ளது? மக்களின் நிலத்தை அளவீடு செய்ய இராணுவத்திற்கு உரிமை கிடையாது.

இவர்கள் யார் அதனை அளப்பதற்கு? எனவும் பாராளுமன்ற உறுப்பினர் சாள்ஸ் நிர்மலநாதன் கேள்வி எழுப்பினார்.

இதன்போது இவற்றை ஆராய்ந்த குழு எழுத்தில் பதிலளிப்பதாகத் தெரிவித்து முடிவுகளின்றிகூட்டம் ஒத்திவைக்கப்பட்டது. (ந-7.10)

## அதிகாரப்...

பாராளுமன்றத்தில் இடம்பெற்ற பிணைப் பொறுப்பளிக்கப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் சட்டமூலம்,

நம்பிக்கைப்பொறுப்பு பற்றுச்சீட்டுக்கள் (திருத்தச்) சட்டமூலம், ஈட்டுச்சட்டம் (திருத்தச்) சட்டமூலம், நிதி குத்தகைக்குவிடுதல் (திருத்தச்) சட்டமூலம் உள்ளிட்ட சட்டம் மூலங்கள் மீதான விவாதத்தில் உரையாற்றும்போதே அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார். விவாதத்தில் தொடர்ந்தும் உரையாற்றிய அமைச்சர்,

நம்மத்தியில்வேறுபாடுகள் காணப்பட்டாலும் தமிழ்க் கட்சி தலைவர்களை வாழ்த்த வேண்டும். கடந்த வரவு செலவுத்திட்டத்தின் போது அவர்கள் அனைவரும் நாங்கள் தனி நாடு கோரவில்லை, ஒரே நாட்டுக்குள் அதிகாரப் பகிர்வையே கோருவதாகத் தெரிவித்தனர்.

சமஷ்டி முறை வரை வேண்டும் என்று கஜேந்திரகுமார் பொன்னம்பலம் கூறியதுடன் ஏனையவர்கள் தமக்கு போதுமான அதிகாரங்களை பகிர வேண்டும் என்று கூறினர்.

இவ்வாறு கூறியதில் எந்தத் தவறும் கிடையாது. அமைதியான முறையில் தமது கருத்துக்களைக் கூறும் சந்தர்ப்பம் இருக்க வேண்டும். அது தொடர்பில் பேச வேண்டும். அதிகாரப் பகிர்வால் நாடு பிளவடையும் என்பது முற்றிலும் பொய்யாகும்.

நாம் ஒவ்வொருவர் மீதும் வைராக்கியம், நம்பிக்கையின்மையை ஏற்படுத்திக்கொண்டிருந்தால் எம்மால் முன்னோக்கி செல்ல முடியாது.

கட்சி பேதமின்றி அதிகார பகிர்வு தொடர்பில் தமது நிலைப்பாடு என்ன என்பது தொடர்பில் அனைவரும் கூற வேண்டும். அதிகார பகிர்வு நாட்டை பிளவுபடுத்தும் என்று சிலர் கூறுகின்றனர்.

ஆனால் அப்படி நடக்காது. கொல்வின் ஆர்.டி சில்வா 1956இல் சிங்கள மொழியை மட்டும் அரசகரும மொழியாக்கும் போது 2 மொழி என்றால் ஒருநாடு என்றும், ஒரு மொழி என்றால் இரண்டு நாடு என்றும் கூறியிருந்தார்.


இந்நிலையில் 30 வருட யுத்தத்தின் பின்னரே இருமொழிகள் அரச கரும மொழியாக்கப்பட்டுள்ளது.. 1956ல் செய்திருந்தால் 30 வருட யுத்தத்தை தடுத்திருக்கலாம். நாங்கள் சந்தர்ப்பவாத அரசியலில் இருந்து விடுபட வேண்டும். எதிர்கால சந்ததியினர் தொடர்பில் சிந்தித்துச் செயற்பட வேண்டும் என்றார். (ந-7.10)


கனடாவில் உயர்கல்வி
STUDY IN UK
இலவச வழிகாட்டல் கருத்தரங்கு
காலம்: 10/03/2024 காலை 10 மணி
இடம்: WEC-கல்லூரி (ஆரியகுளம்,யாழ்ப்பாணம்)
நேரடியாக வருகைதந்து இலவச ஆலோசனைகளை பெற்றுக்கொள்ள
வெற்றிகரமான 13 வருட சேவையில்
WEC COLLEGE
புதிய உயர்கல்லூரி வளாகம்
ஆரியகுளம்,யாழ்ப்பாணம்
Whatsapp: 0779265447
0212050988,0217200989
கிளை: சங்கத்தானை,சாவகச்சேரி
(19390)

மற்றுமொரு புதிய பஸ் சேவை ஆரம்பித்துள்ளனர்
Village Hotel Jaffna Express
அச்சுவேலி → புன்னாலைக்கட்டுவன் →
உரும்பிராய் → திருநெல்வேலி →
யாழ்ப்பாணம் → கொழும்பு
கட்டணம் - 2700/=
தொடர்புகளுக்கு
077 544 8503
(19118)

மணமகள் தேவை
1981 இல் பிறந்த கார்த்திகை 4 ஆம் பாதம் உடைய லண்டன் குடியுரிமை பெற்ற B.Sc Jaffna, M.Sc U.K சொந்த தொழில் செய்யும் விவாகரத்துப் பெற்ற மணமகனுக்கு மணமகள் தேவை.
தொடர்புகளுக்கு
077 110 7624
(C-8493)


## மரண அறிவித்தல்



பிறப்பு 10 . 03 . 1957

இறப்பு 04 . 03 . 2024

### நடராஜா இராஜஸ்ரீதாசன்

சரசாலை வடக்கைப் பிறப்பிடமாகவும் கொழும்பு, கனடா முதலிய இடங்களை வாழ்விடங்களாகவும் கொண்ட நடராஜா இராஜஸ்ரீதாசன் அவர்கள் கடந்த 2024.03.04 அன்று கனடாவில் காலமானார்.

அன்னார் சரசாலை வடக்கில் வசித்து வந்த அமரர்களான நடராஜா - தெய்வநாயகி தம்பதியரின் புதல்வரும் காலஞ்சென்றவர்களான கமலாம்பிகை, கருணாநிதி மற்றும் இரத்தின ஸ்ரீந்திரன்(வவுனியா), புகன்ஸ்ரீந்திரன்(ஓய்வு நிலை ஆசிரிய ஆலோசகர்), பாலஸ்ரீந்திரன், தயாபரன், பாஸ்கராதேவி(ஜேர்மனி) ஆகியோரின் சகோதரரும் காலஞ்சென்ற செல்வராணியின் அன்புக் கணவரும் காண்டீபன் (கனடா), பிரபு(லண்டன்), பார்த்தீபன்(லண்டன்) ஆகியோரின் அன்புத் தந்தையும் கருணாநிதியின்(ஜேர்மனி) மைத்துனரும் மதுரன், ஓவியன் ஆகியோரின் தாய்மாமனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் கனடாவில் நடைபெறும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல் - புகன்ஸ்ரீந்திரன்(சகோதரர்)
கோண்டாவில், மேற்கு.
077 960 3001
(C-8495)


V2 VISA SERVICES
கனடா
077 77 20 322
077 77 19 322
Visit Visas
Air Tickets
• கனடா PASSPORT APPOINMENTS
விமான பயணச்சீட்டுக்கள்
• Student Visas • Online Appointments
• இந்தியா Visas • Online Visas - All countries
• Police Clearance • Travel Insurance
Sri lankan Visa Extention
வெளிநாட்டவருக்கான இலங்கை விசா நீடிப்பு
(C-8494)

மொத்த கொள்வனவு
400g அங்கர் பால்மா, யோக்கட் மொத்தக் கொள்வனவுகளிற்கு எம்மை நாடுங்கள்
Happy Super market
உரும்பிராய்
077 121 5548
(19394)



தேவை
வீட்டில் தங்கி நின்று வேலை செய்யக்கூடிய பணிப்பெண் தேவை.
தொடர்புகளுக்கு
074 216 0494
(19376)

சாரதி தேவை
வான், ஆட்டோ ஓடத்தெரிந்தவராகவும் அலுவலக வேலைகளுக்கு உதவுபவராகவும் இருக்க வேண்டும்.
சம்பளம்: 40'000/-



வயது: 21 முதல் 40 வரை
தொடர்புக்கு:-
0777068777
(C-8494)


## கண்ணீர் அஞ்சலி



தோற்றம் 1966.04.20 மறைவு 2024.03.05

எமது பாடசாலை ஆசிரியர்

### அமரர் திருமதி சாந்தினி நாகேஸ்வரன்

*கண்முன்னே வாழ்ந்தகாலம் கனவாகிப் போனாலும்*
*எங்கள் முன்னே உங்கள் முகம் எந்நாளும் உயிர் வாழும்*
*மண்விட்டு மறைந்த நீங்கள் விண்நோக்கிச்*
*சென்றாலும் கண் விட்டு மறையாமல் கனகாலம் இருப்பீர்கள்*

அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

யா/கல்வியங்காடு இந்து தமிழ் கலவன் பாடசாலை
அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்
(19392)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிட்டெட் ஸ்தாபனத்தினரால் [illegible] யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 08.03.2024 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.